# செயலாக்கத் திட்டம்

## 2015 – 2016

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

©
தமிழ்நாடு அரசு
2015

# செயலாக்கத் திட்டம் – 2015–2016

## குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

### 1. முன்னுரை

நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் பிரிவு முக்கிய பங்கு வகிக்கிறது. இப்பிரிவானது நாட்டின் தொழில் உற்பத்தியில் 45 விழுக்காடும், ஏற்றுமதியில் சுமார் 40 விழுக்காடும் மற்றும் மொத்த தொழில் அலகுகளின் எண்ணிக்கையில் 95 விழுக்காடும் பங்களிக்கிறது. தமிழ்நாட்டில் 31.03.2015 வரை, ரூ.91,480 கோடி மொத்த முதலீட்டுடன் அமைக்கப்பட்டுள்ள சுமார் 11.10 இலட்சம் பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் 69.69 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு அளித்து வருகின்றன. மேலும், விவசாயத்திற்கு அடுத்தபடியாக இப்பிரிவே அதிக வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது.

மாநில பொருளாதாரத்தில் சிறு தொழில்களின் பங்கை கருத்தில் கொண்டு, தொழில் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டு 14.07.1993 முதல் 'சிறு தொழில்கள் துறை' உருவாக்கப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பிரிவின் நெடுங்கால கோரிக்கையினை ஏற்கும் வகையிலும், இப்பிரிவின் முன்னேற்றங்களுக்கு ஒரு சட்டப்பூர்வ வடிவமைப்பை ஏற்படுத்தி உதவும் பொருட்டும், மத்திய அரசு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம், 2006ஐ இயற்றி 02.10.2006 முதல் அமலாக்கி உள்ளது. மேலும், மத்திய அரசின் கொள்கையை ஒற்றி முன்பிருந்த ''சிறு தொழில் துறை'', ''குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை'' என 22.02.2008 முதல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

மாநிலத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான கொள்கை வகுத்தலும் மற்றும் அவற்றுக்காக புதிய திட்டங்களை உருவாக்குதலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் பணியாகும். தொழில் வணிக ஆணையரகம்,

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI), மாநில இரு பொதுத் துறை நிறுவனங்களான தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO) மற்றும் தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI) ஆகியன குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

தொழில் வணிக ஆணையரகம், மாநிலத்தின் தொழில் வளர்ச்சிக்கு பொதுவாகவும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு குறிப்பாகவும், பல்வேறு திட்டங்களை பொது மேலாளர், மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோர் மூலமாக செயல்படுத்தி வருகிறது. தொழில் வணிக ஆணையரகம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களின் வளர்ச்சி, நவீனமயமாக்குதல், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் தரக்கட்டுப்பாடு ஆகியவை சார்ந்த திட்டங்களுக்கு நிதியுதவி, தொழில்நுட்ப உதவி மற்றும் வழிகாட்டிச் சேவை போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கென தொழிற்பேட்டைகளை அமைத்து வருகிறது. தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI) அறைகலன்கள், தளவாடங்கள் மற்றும் கைப்பம்புகள் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம் (EDI), தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு, தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி அளிக்கும் பயிற்சி நிறுவனமாக செயல்படுகிறது.

தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (TANSI), தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (SIDCO), தமிழ்நாடு தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT), தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC), தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (TIDCO), தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம் (EDI) ஆகிய அரசு நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்தல் மற்றும் நிதியினைப் பெற்றுத்தருதல் ஆகிய பணிகளையும் இந்த ஆணையரகம் செயல்படுத்தி வருகிறது.

## 2. தொழில் வணிக ஆணையரகத்தின் பல்வேறு செயல்பாடுகள்

1. தொழில் முனைவோர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து, அவற்றிற்கான திட்ட அறிக்கைகள் தயாரித்து, நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம் நிதி வசதி பெற்றுத் தருதல், போன்ற வழிகாட்டுச் சேவைகள் புரிதல்.
2. கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் மைய / மாநில அரசுகளின் தொழில் மேம்பாடு குறித்த கொள்கைகள், திட்டங்கள் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
3. தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாட்டு பயிற்சித் திட்டங்களைச் செயல்படுத்துதல்.
4. தொழில் துவங்கத் தேவையான அரசு துறை சார்ந்த உரிமங்களை ஒற்றைச் சாளர முறை தீர்வுக் குழு (Single Window Clearance Committee) மூலம் பெற்றளித்தல்.
5. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழில்முனைவோர் பதிவறிக்கை பகுதி–I மற்றும் பகுதி–II –ற்கான ஒப்புகைச் சான்று வழங்குதல் .
6. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் மானியங்களை ஒப்பளித்தல் மற்றும் வழங்குதல்.
7. மைய அரசின் பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் மாநில அரசின் கீழ் புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS) மற்றும் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP) ஆகிய வேலையில்லா இளைஞர்களுக்கான குறிப்பாக ஏழைகளுக்கான மானியத்துடன் கூடிய கடன் வழங்கும் திட்டங்களை வங்கிகள் மூலம் செயல்படுத்துதல்.
8. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்களுக்கு வினியோகம் செய்து பட்டுவாடா செய்யப்படாமல் உள்ள இனங்களில் நிலுவைத் தொகையை பெற்றுத் தர உதவுதல்.
9. வேதியியல், உலோகம், உலோகப் பொருட்கள், மின் மற்றும் மின்னணுக் கருவிகள் மற்றும் உபகரணங்களுக்கான பரிசோதனை வசதிகளை அளித்தல்.
10. இலகு ரகப் பொறியியல் தொழில்கள், கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு, கண்ணாடி உபகரணங்கள் உருவாக்குதல் ஆகிய தொழில்களில் பயிற்சி அளித்தல்.
11. மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கான தனிப்பட்ட தொழிற்பேட்டைகளை பராமரித்தல்.
12. தகவல் வங்கி, மாவட்டத் தொழில் மையங்களுடன் இணைக்கப்பட்ட தகவல் மையம் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கான வழிகாட்டுதல்கள் அளித்தல்.
13. வீட்டு உபயோக மின் சாதனங்களுக்கான தரக் கட்டுப்பாட்டு ஆணைகளை அமல் படுத்துதல்.
14. குடிசைத் தொழில் மற்றும் கைவினைத் தொழில்களை உருவாக்கி மேம்படுத்துதல்.
15. மாவட்டத் தொழில் மையங்களிலுள்ள ஏற்றுமதி வளர்ச்சிப் பிரிவின் மூலம் ஏற்றுமதியை ஊக்குவித்தல்.

16. நலிவடைந்த குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை புனரமைப்பதற்கான விண்ணப்பங்களை பரிசீலித்தல் மற்றும் புனரமைப்பு உதவித் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

17. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான மாநில / மைய அரசு அறிவிக்கும் சிறப்பு நிதியுதவித் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை மேற்பார்வையிடுதல்.

18. குறு, மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு மத்திய / மாநில அரசுகளால் வழங்கப்படும் விருதுகளைப் பெற்றுத்தர பரிந்துரை செய்தல்.

19. தொழில் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்தல் மற்றும் மேம்படுத்துதல்.

20. தொழிற் கூட்டுறவு சங்கங்களுக்கு தாய்கோ வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்கள் மூலம் நிதி உதவி அளித்தல்.

21. மாநிலத்தின் கயிறுத் தொழிலுக்கான ஸ்புரூட்டி (SFURTI), ரிமோட் (REMOT) உள்ளிட்ட திட்டங்களை செயல் படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

## பிற்சேர்க்கை–1

## குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

## திட்டம் மற்றும் திட்டம் சாரா ஒதுக்கீடுகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | விவரங்கள் | 2013–2014 இல் செலவு | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2014–2015 | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016 |
|---|---|---|---|---|---|
| 1 | திட்டத்தில் சேராதவை | **571234** | **580394** | **620745** | **1001518** |
| 2 | திட்டத்தில் சேர்ந்தவை | **1696306** | **3018535** | **1699899** | **2657551** |
| மொத்தம் | | **2267540** | **3598929** | **2320644** | **3659069** |

## பிற்சேர்க்கை–2

## வரவு–செலவு சுருக்கம்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்ட வகை பற்றிய விவரங்கள் | 2013–2014 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2014–2015 | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | மாநிலத் திட்டங்கள் | 571234 | 1681264 | 2252498 | 580394 | 3003041 | 3583435 | 620745 | 1682615 | 2303360 | 1001518 | 2650050 | 3651568 |
| 2 | மைய அரசால் நிறைவேற்றப்படும் திட்டங்கள் | 0 | 8530 | 8530 | 0 | 8993 | 8993 | 0 | 9515 | 9515 | 0 | 1 | 1 |
| 3 | மைய, மாநில அரசுகள் பொறுப்பேற்கும் திட்டங்கள் | 0 | 6512 | 6512 | 0 | 6501 | 6501 | 0 | 7769 | 7769 | 0 | 7500 | 7500 |
| | மொத்தம் | 571234 | 1696306 | 2267540 | 580394 | 3018535 | 3598929 | 620745 | 1699899 | 2320644 | 1001518 | 2657551 | 3659069 |

## பிற்சேர்க்கை– 3
## நிதி ஆதாரம்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | முக்கிய தலைப்புகள் | 2013–2014 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2014–2015 | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | 2425 – கூட்டுறவு | 0 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 |
| 2 | 2851 – கிராம மற்றும் சிறு தொழில்கள் | 465727 | 1260544 | 1726271 | 476737 | 2364330 | 2841067 | 514422 | 1535694 | 2050116 | 890406 | 2147547 | 3037953 |
| 3 | 2852 – தொழில்கள் | 79871 | 1324 | 81195 | 76561 | 2 | 76563 | 78953 | 2 | 78955 | 82301 | 1 | 82302 |
| 5 | 3451 – தலைமைச் செயலகம் – பொருளாதாரப் பணிகள் | 25636 | 150 | 25786 | 27095 | 500 | 27595 | 26970 | 500 | 27470 | 28810 | 1 | 28811 |
| 6 | 4059 – பொதுப் பணிகள் குறித்த மூலதனச் செலவு | 0 | 260551 | 260551 | 0 | 150000 | 150000 | 0 | 140000 | 140000 | 0 | 10000 | 10000 |
| 7 | 4425. – கூட்டுறவு சங்கங்களுக்கான முதலீட்டுச் செலவு | 0 | 0 | 0 | 0 | 2700 | 2700 | 0 | 22700 | 22700 | 0 | 0 | 0 |
| 8 | 4851 – கிராமம் மற்றும் சிறு தொழில்கன் மீதான முதலீட்டுச் செலவு | 0 | 173737 | 173737 | 0 | 501002 | 501002 | 0 | 1002 | 1002 | 0 | 500001 | 500001 |
| 9 | 7610. – அரசுப் பணியாளர் களுக்குக் கடன்கள் | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 400 | 0 | 400 | 1 | 0 | 1 |
| | மொத்தம் | **571234** | **1696306** | **2267540** | **580394** | **3018535** | **3598929** | **620745** | **1699899** | **2320644** | **1001518** | **2657551** | **3659069** |

# பிற்சேர்க்கை–4

## நிதி தேவைகள் 2014–15 மற்றும் 2015–16

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | திட்டங்கள் பற்றிய விவரங்களும் நடவடிக்கை வகைகளும் | 2013–2014 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–2015 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2014–2015 | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–2016 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| | அ. மாநிலத் திட்டங்கள் | | | | | | | | | | | | |
| 1 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் (001) | 79871 | 1324 | **81195** | 76561 | 2 | **76563** | 78953 | 2 | **78955** | 82301 | 1 | 82302 |
| 2 | கட்டுமானம் (051) | | 260551 | **260551** | | 150000 | **150000** | | 140000 | **140000** | | 10000 | 10000 |
| 3 | தலைமைச் செயலகம் (090) | 25636 | 150 | **25786** | 27095 | 500 | **27595** | 26970 | 500 | **27470** | 28810 | 1 | 28811 |
| 4 | தொழிற்பேட்டைகள் (101) | 7280 | 0 | **7280** | 8067 | 1001 | **9068** | 6943 | 1001 | **7944** | 7392 | 1 | 7393 |
| 5 | சிறு தொழில்கள் (102) | 401944 | 1370471 | **1772415** | 410014 | 2682745 | **3092759** | 446913 | 1250618 | **1697531** | 817815 | 2257939 | 3075754 |
| 6 | கயறு தொழில்கள் (106) | 0 | 1415 | **1415** | 0 | 467 | **467** | 0 | 468 | **468** | 0 | 506 | 506 |
| 7 | ஏனைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவி (108) | 0 | 0 | **0** | 0 | 2700 | **2700** | 0 | 22700 | **22700** | 0 | 0 | 0 |
| 8 | ஏனைய கூட்டுறவுச் சங்கங்களில் முதலீடு (108) | 0 | 0 | **0** | 0 | 1 | **1** | 0 | 1 | **1** | 0 | 1 | 1 |
| 9 | கூட்டுக் கிராம–சிறு தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் (110) | 56892 | 1150 | **58042** | 58656 | 0 | **58656** | 60566 | 1700 | **62266** | 65199 | 0 | 65199 |
| 10 | வீடு கட்ட முன்பணம் (201) | 0 | | **0** | 1 | | **1** | 400 | | **400** | 1 | | 1 |
| 11 | ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் (789) | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 205800 | 205800 |
| 12 | பழங்குடியினர் பகுதித் துணைத் திட்டம் (796) | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 9800 | 9800 |
| 13 | ஏனைய செலவு (800) | 0 | 164590 | **164590** | 0 | 165625 | **165625** | 0 | 265625 | **265625** | 0 | 166001 | 166001 |
| 14 | கழிக்கவும் மாநில புதுமை நிதியிலிருந்து செலவிடப்பட்ட தொகை (902) | 0 | -63387 | **-63387** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 0 | 0 |
| 15 | கழிக்கவும் – மிகையாக கொடுத்த தொகையை திருப்பி செலுத்துதல் (911) | -389 | -55000 | **-55389** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 0 | 0 |
| | மொத்தம் | **571234** | **1681264** | **2252498** | **580394** | **3003041** | **3583435** | **620745** | **1682615** | **2303360** | **1001518** | **2650050** | **3651568** |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **ஆ. மைய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்** | | | | | | | | | | | | | |
| 1 | நெறிப்படுத்தலும் நிருவாகமும் (001) | 0 | 8530 | **8530** | 0 | 8992 | **8992** | 0 | 9514 | **9514** | 0 | 0 | **0** |
| 2 | சிறு தொழில்கள் (102) | 0 | 0 | **0** | 0 | 1 | **1** | 0 | 1 | **1** | 0 | 1 | **1** |
| **மொத்தம்** | | 0 | 8530 | **8530** | 0 | 8993 | **8993** | 0 | 9515 | **9515** | 0 | 1 | **1** |
| **இ. மைய மாநில அரசுகள் செலவை ஏற்கும் திட்டங்கள்** | | | | | | | | | | | | | |
| 1 | சிறு தொழில்கள் (102) | 0 | 0 | **0** | 0 | 1 | **1** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** |
| 2 | கூட்டுக் கிராம–சிறு தொழில்கள், கூட்டுறவுச் சங்கங்கள் (110) | 0 | 6512 | **6512** | 0 | 6500 | **6500** | 0 | 7769 | **7769** | 0 | 7500 | **7500** |
| **மொத்தம்** | | **0** | **6512** | **6512** | **0** | **6501** | **6501** | **0** | **7769** | **7769** | **0** | **7500** | **7500** |
| **பெரு மொத்தம்** | | **571234** | **1696306** | **2267540** | **580394** | **3018535** | **3598929** | **620745** | **1699899** | **2320644** | **1001518** | **2657551** | **3659069** |

# பிற்சேர்க்கை–5

## நோக்கம் வாரியான செலவு வகைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| வ. எண் | நோக்கம் | 2013–14 இல் செலவு | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2014–15 | | | திருத்தப்பட்ட திட்ட மதிப்பீடு 2014–15 | | | வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 2015–16 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் | திட்டத்தில் சேராதவை | திட்டத்தில் சேர்ந்தவை | மொத்தம் |
| 1 | சம்பளம் (01) | 22055 | 5518 | 226073 | 215625 | 5639 | 221264 | 227436 | 5651 | 233087 | 241088 | 1017 | 242105 |
| 2 | கூலி(02) | 58 | 0 | 58 | 76 | 0 | 76 | 76 | 0 | 76 | 76 | 0 | 76 |
| 3 | அகவிலைப்படிகள்(03) | 171367 | 4526 | 175893 | 192539 | 5136 | 197675 | 218698 | 5504 | 224202 | 249534 | 1069 | 250603 |
| 4 | பயணச் செலவுகள்(04) | 4866 | 199 | 5065 | 5400 | 327 | 5727 | 5390 | 327 | 5717 | 5681 | 36 | 5717 |
| 5 | அலுவலகச் செலவுகள்(05) | 9028 | 2844 | 11872 | 10093 | 1877 | 11970 | 10450 | 1876 | 12326 | 10150 | 1876 | 12026 |
| 6 | வாடகை, கட்டணம். வரிகள் (06) | 10535 | 0 | 10535 | 3079 | 0 | 3079 | 4577 | 0 | 4577 | 2416 | 0 | 2416 |
| 7 | வெளியீடுகள் (07) | 10 | 0 | 10 | 13 | 0 | 13 | 12 | 0 | 12 | 13 | 0 | 13 |
| 8 | விளம்பரங்கள் (08) | 1087 | 3694 | 4781 | 885 | 4376 | 5261 | 998 | 4376 | 5374 | 994 | 4376 | 5370 |
| 9 | உதவித் தொகை(09) | 0 | 181711 | 181711 | 0 | 842392 | 842392 | 0 | 195127 | 195127 | 0 | 637509 | 637509 |
| 10 | பங்குத் தொகை(10) | 0 | 0 | 0 | 35 | 0 | 35 | 35 | 0 | 35 | 35 | 0 | 35 |
| 11 | மானியங்கள்(11) | 144090 | 1141153 | 1285243 | 140000 | 1471752 | 1611752 | 140100 | 1297752 | 1437852 | 480001 | 1471751 | 1951752 |
| 12 | படிப்பு உதவித் தொகை (12) | 187 | 0 | 187 | 28 | 0 | 28 | 28 | 0 | 28 | 30 | 0 | 30 |
| 13 | பெரும் பணிகள்(16) | 0 | 272366 | 272366 | 1 | 653701 | 653702 | 0 | 143701 | 143701 | 0 | 510000 | 510000 |
| 14 | சிறிய பணிகள்(17) | 6 | 14924 | 14930 | 950 | 616 | 1566 | 950 | 616 | 1566 | 0 | 1 | 1 |
| 15 | பராமரிப்பு(18) | 429 | 2160 | 2589 | 490 | 2 | 492 | 483 | 2 | 485 | 489 | 1 | 490 |
| 16 | இயந்திரங்கள், தளவாடங்கள் (19) | 623 | 5204 | 5827 | 1058 | 2086 | 3144 | 1058 | 2086 | 3144 | 1058 | 1 | 1059 |
| 17 | மோட்டார் வாகனங்கள் (21) | 877 | 700 | 1577 | 461 | 601 | 1062 | 461 | 601 | 1062 | 473 | 1 | 474 |
| 18 | முதலீடுகள் (22) | 0 | 160000 | 160000 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 20001 | 20001 |
| 19 | பொருட்கள் (24) | 602 | 0 | 602 | 810 | 0 | 810 | 810 | 0 | 810 | 810 | 0 | 810 |
| 20 | கணக்குகளிடையே மாற்றம் (30) | 0 | -61465 | -61465 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 |
| 21 | தொழில் முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல் (33) | 1656 | 0 | 1656 | 2852 | 0 | 2852 | 2807 | 0 | 2807 | 2667 | 0 | 2667 |
| 22 | இதர கட்டணங்கள் (34) | 114 | 0 | 114 | 173 | 0 | 173 | 160 | 0 | 160 | 160 | 0 | 160 |
| 23 | வாகன எரிபொருள் (45) | 3496 | 0 | 3496 | 4222 | 0 | 4222 | 4213 | 0 | 4213 | 4220 | 0 | 4220 |
| 24 | பண்டிகை முன்பணம்– பற்று (49) | 2985 | 125 | 3110 | 4750 | 125 | 4875 | 4340 | 125 | 4465 | 4495 | 5 | 4500 |
| 25 | பண்டிகை முன்பணம் – வரவு (49) | -2561 | -76 | -2637 | -4750 | -125 | -4875 | -4340 | -125 | -4465 | -4495 | -5 | -4500 |
| 26 | இழப்பீடு (51) | 0 | 0 | 0 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 | 1 | 0 | 1 |

| | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 27 | பரிசுகள் அளித்தல் (59) | 263 | 0 | **263** | 182 | 0 | **182** | 182 | 0 | **182** | 182 | 0 | **182** |
| 29 | புத்தகங்கள் மற்றும் கால வெளியீடுகள் (68) | 0 | 0 | **0** | 0 | 1 | **1** | 0 | 1 | **1** | 0 | 0 | **0** |
| 30 | அச்சடித்தல் (71) | 0 | 0 | **0** | 5 | 0 | **5** | 5 | 0 | **5** | 5 | 0 | **5** |
| 31 | பயிற்சி (72) | 43 | 16829 | **16872** | 51 | 29375 | **29426** | 51 | 21625 | **21676** | 51 | 29750 | **29801** |
| 32 | கணினி ,உதிரி பாகங்கள் (76) | 1307 | 894 | **2201** | 1364 | 653 | **2017** | 1364 | 653 | **2017** | 1383 | 162 | **1545** |
| 33 | கழிக்கவும் – திருப்பி வசூலிப்பவை (77) | -389 | -55000 | **-55389** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** | 0 | 0 | **0** |
| 34 | அரசுப் பணியாளர் களுக்குக் கடன்கள் (00) | 0 | 0 | **0** | 1 | 0 | **1** | 400 | 0 | **400** | 1 | 0 | **1** |
| **மொத்தம்** | | **571234** | **1696306** | **2267540** | **580394** | **3018535** | **3598929** | **620745** | **1679899** | **2300644** | **1001518** | **2677551** | **3679069** |

## 3. தொழில் வணிக ஆணையரகம்

**1. இயக்குதல், மேற்பார்வை மற்றும் கொள்கை வகுத்தல்**

தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர், ஆணையரகத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு கூடுதல் ஆணையர், மூன்று கூடுதல் இயக்குநர்கள், ஐந்து இணை இயக்குநர்கள், ஒரு முதன்மைக் கணக்கு அலுவலர் மற்றும் தொழில்நுட்ப / தொழில்நுட்பம் சாராத பணியாளர்கள் பணிபுரிகின்றனர். அனைத்து சார்பு அலுவலர்களும் செயல்முறை அடிப்படையில் பணிபுரிகின்றனர், இவர்களுக்கு மாநில அளவிலான அதிகாரம் உண்டு.

**2. மாவட்டத் தொழில் மையங்கள்**

மொத்தமுள்ள **32** வருவாய் மாவட்டங்களில், **31** மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்களும் மற்றும் சென்னை மாவட்டத்தில் மண்டல இணை இயக்குநர் அலுவலகமும் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோருக்கு தொழில் துவங்க தேவையான உதவிகளைச் செய்து வருகின்றன. தொழில்நுட்ப களப்பணி அலுவலர்கள் மற்றும் செயல் மேலாளர்களின் துணையுடன் செயல்படும் பொது மேலாளர்களால் மாவட்டத் தொழில் மையங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. தொழில்முனைவோர்கள் புதிய தொழில் நிறுவனங்கள் துவங்கவும், ஏற்கனவே செயல்பட்டு வரும் நிறுவனங்கள் முன்னேற வழிகாட்டுதல்கள் செய்வதும் பொது மேலாளர்களின் பொறுப்பாகும். மேலும், பொருளாதார மாற்றத்திற்கேற்றவாறு மாவட்டத்தில் புதிய தொழில் வாய்ப்புகளைக் கண்டறிந்து வழி நடத்துதலும் இவர்களது பொறுப்பாகும்.

**3. தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி 1–க்கான ஒப்புகை அளித்தல்**

இணையதளம் மூலமாக தொழில் முனைவோர் பதிவறிக்கை (பகுதி **1**) பதிவு செய்யும் முறை அமல்படுத்தியதன் விளைவாக எந்த ஒரு தொழில் முனைவோர் வேண்டுமானாலும் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி **1–**ஐ இணையதளம் மூலமாகவோ அல்லது மாவட்ட

தொழில் மையத்தின் மூலமாகவோ பதிவு செய்யலாம். அதற்கு மாவட்ட தொழில் மையம், தொழில் முனைவோர் நிறுவன ஒப்பந்த எண்ணை ஒதுக்கீடு செய்து ஒப்புகை வழங்கும்.

தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி 1–ஐ பதிவு செய்வது, குறு, சிறு மற்றும் நடுத்தர, சேவை தொடர்பான தொழில் நிறுவனங்களின் விருப்பத்திற்குரியதாகும். ஆனால், உற்பத்தி சார்ந்த நடுத்தர நிறுவனங்கள் பதிவறிக்கை பகுதி 1–ஐ பதிவு செய்வது கட்டாயமானதாகும்.

2014–15 ஆம் ஆண்டில், தொழில் முனைவோர் பதிவறிக்கை, பகுதி 1, இணையதளம் வாயிலாக மற்றும் நேரடியாக தாக்கல் செய்த 1,19,347 நிறுவனங்களுக்கு ஒப்புகை வழங்கப்பட்டுள்ளன.

**கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல்பாட்டு விவரம் கீழ்க்கண்டவாறு ஆகும்.**

| ஆண்டு | பகுதி 1 | | | |
|---|---|---|---|---|
| | நேரடி | இணைய தளம் | மொத்தம் | இணையதளம் வாயிலாக பதியப் பெற்ற பதிவறிக்கைளின் விழுக்காடு |
| 2010-11 | 12059 | 65760 | 77819 | 84.50 |
| 2011-12 | 9999 | 73935 | 83934 | 88.10 |
| 2012-13 | 9997 | 84819 | 94816 | 89.50 |
| 2013-14 | 1442 | 107519 | 108961 | 98.68 |
| 2014-15 | 0 | 119347 | 119347 | 100.00 |

**4. தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி 2 –ற்கான ஒப்புகை அளித்தல்**

நிறுவனம் உற்பத்தியைத் தொடங்கிய பின் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி 2 பதிவு எண் பெறவேண்டும். பகுதி 2 பதிவு பெற்ற தொழில் நிறுவனங்கள் அரசின் மானியங்கள், கொள்முதல் முன்னுரிமை, அரசு ஒப்பந்தப் புள்ளிக்கான பிணை வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்கு ஆகிய அரசின் சிறப்புச் சலுகைகளைப் பெறுகின்றன.

**2014–15** ஆம் ஆண்டில் (31.01.2015 முடிய), தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி **2** இணையதளம் வாயிலாக மற்றும் நேரடியாக தாக்கல் செய்த 1,43,104 நிறுவனங்களுக்கு உரிய ஒப்புகை எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

**கடந்த ஐந்து ஆண்டுகளுக்கான செயல்பாட்டு விவரம் கீழ்க்கண்டவாறு ஆகும்.**

| **ஆண்டு** | **பகுதி 2** | | | |
|---|---|---|---|---|
| | **நேரடி** | **இணையதளம்** | **மொத்தம்** | **இணையதளம் வாயிலாக பதியப் பெற்ற பதிவறிக்கைகளின் விழுக்காடு** |
| 2010-11 | 16514 | 41388 | 57902 | 71.50 |
| 2011-12 | 18867 | 51891 | 70758 | 73.34 |
| 2012-13 | 16457 | 74517 | 90974 | 81.91 |
| 2013-14 | 2540 | 113853 | 116393 | 97.82 |
| 2014-15 | 0 | 143104 | 143104 | 100.00 |

மேலே கண்டுள்ள புள்ளி விவரங்களின்படி தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி **1** மற்றும் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி **2** ஆகியவற்றில் இணையதளம் வாயிலாக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

**5. மானியங்கள்**

**2011–12**, **2012–13**, **2013–14** மற்றும் **2014–15** ஆம் ஆண்டுகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான பல்வேறு மானியத் திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு மற்றும் செலவு செய்யப்பட்ட விவரம் கீழே தரப்பட்டுள்ளது:–

**(ரூபாய் இலட்சத்தில்)**

| வ. எ ண் | திட்டத்தின் பெயர் | 2011-12 | | 2012-13 | | 2013-14 | | 2014-15 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப் பட்டது | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது | நிதி ஒதுக்கீடு | செலவு செய்யப்பட்டது |
| 1 | மூலதன மானியம் | 5000 | 5000 | 6000.00 | 6000.00 | 7000.00 | 7000.00 | 7000.00 | 7000.00 |
| 2 | குறைந்தழுத்த மின் மானியம் | 600 | 600 | 600.00 | 600.00 | 600.00 | 600.00 | 600.00 | 600.00 |
| 3 | குறு உற்பத்தி நிறுவனங்களுக் கு மதிப்பு கூட்டுவரிக்கு | 250 | 250 | 350.00 | 350.00 | 350.00 | 350.00 | 350.00 | 350.00 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஈடான மானியம் | | | | | | | | |
| 4 | மின்னாக்கி மானியம் | 800 | 800 | 2348.09 | 2348.09 | 800.00 | 800.00 | 800.00 | 800.00 |
| 5 | பின்முனை வட்டி மானியம் | | | | | | | | |
| | அ. தொழில் நுட்ப மேம்பாடு, நவீன மயமாக்கல் | 303.87 | 303.87 | 24.48 | 24.48 | 30.00 | 30.00 | 30.00 | 30.00 |
| | ஆ. தேசிய விளிம்பு நிதி திட்டம் | 8.85 | 8.85 | 2.66 | 1.88 | 0.01 | 0 | 0.01 | - |
| | இ. தேசிய சிறுதொழில் நிறுவனம் மற்றும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்தப்படும் கூட்டுக்கடன் கூட்டுகாலக்கடன் திட்டம் மற்றும் கடன் உத்தரவாத நிதிகுழும திட்டத்தின் கீழ் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனத்திடம் பெறுப்படும் காலக்கடன். | 14.74 | 14.74 | 10.00 | 9.88 | 10.00 | 10.00 | 10.00 | 10.00 |
| | **மொத்தம்** | **6977.46** | **6977.46** | **9340.75** | **9334.33** | **8790.01** | **8790.00** | **8790.01** | **8790.00** |

## 6. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம் (NEEDS)

படித்த இளைஞர்களை முதல் தலைமுறை தொழில் முனைவோராக மாற்ற உதவும் நோக்குடன் நாட்டிலேயே முதன் முறையாக “புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை **2012–13**ஆம் ஆண்டு முதல் செயல் படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ் படித்த இளைஞர்களுக்கு தொழில் முனைவோர் பயிற்சி அளிக்கப்பட்டு, தொழில் தொடங்க திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, நிதி நிறுவனங்களில் நிதி உதவி பெற உதவுவதுடன், பெருந்தொழில் நிறுவனங்களுடன் அவர்களுக்கு வணிக தொடர்பும் அமைத்துத்தர நடவடிக்கை எடுக்கப்படும். பயிற்சி முடித்த இளைஞர்களுக்கு வங்கிகள் மற்றும் தமிழ்நாடு

தொழில் முதலீட்டுக் கழகம் ஆகியவற்றின் மூலம் திட்ட மதிப்பில் உற்பத்தி மற்றும் சேவை தொழில் துவங்க 25 விழுக்காடு முதலீட்டு மானியம் ரூ 25.00 இலட்சத்திற்கு மிகாமல் மற்றும் 3 விழுக்காடு வட்டி குறைப்புடன் கூடிய கடனும் பெற உதவி செய்யப்படும்.

இத்திட்டத்தில், 50 விழுக்காடு வரை மகளிருக்கு ஒதுக்கப்பட்டு அதில் குறிப்பாக தகுதியுள்ள, ஆதரவற்ற மகளிருக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதோடு மட்டும் அல்லாமல் ஆதி திராவிடர்களுக்கு 18 விழுக்காடும் பழங்குடியினருக்கு 1 விழுக்காடும் மற்றும் மாற்று திறனாளிகளுக்கு 3 விழுக்காடும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண். 49, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (டி2) துறை, நாள் 29.10.2012இன் படி, இத்திட்டத்தினை வெற்றியுடன் செயல்படுத்தும் நோக்குடன் அதன் வழிகாட்டும் முறைகள் வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்திட்டத்தை 20.02.2013 அன்று சென்னை தலைமை செயலகத்தில் துவக்கி வைத்தார்கள்.

கடந்த 3 ஆண்டுகளுக்கான திட்டத்தின் செயல்பாடு குறித்த விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

(ரூ.இலட்சத்தில்)

| நிதி ஆண்டு | ஒப்பளிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | | நிதி ஒதுக்கீடு | மானியப் பட்டுவாடா | |
|---|---|---|---|---|---|
| | எண்ணிக்கை | மானியம் | | எண்ணிக்கை | மானியம் |
| 2012–13 | 224 | 2504. 57 | 2400.00 | 218 | 2156.70 |
| 2013–14 | 482 | 4952.00 | 2500.00 | 456 | 2500.00 |
| 2014–15 | 555 | 5157.00 | 3060.00 | 172 | 3060.00 |

## 7. பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)

இந்திய அரசின் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமைச்சகம், பாரதப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் கிராம வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் ஆகிய இரு திட்டங்களையும் இணைத்து முதல்தலைமுறை தொழில் முனைவோர்கள் குறுந்தொழில் உற்பத்தி மற்றும் சேவை நிறுவனங்களைத் துவங்க, பிரதமரின் வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் என்ற ஊக்கத் தொகையுடன் கூடிய புதிய கடனளிப்புத் திட்டம்

2008 – ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. சேவை நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.10 லட்சம் வரையிலும், உற்பத்தி நிறுவனம் தொடங்குவதற்கு ரூ.25 லட்சம் வரையிலும் ஒரு பயனாளி இத்திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்கு தகுதியுள்ளவராவார். இத்திட்டம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள ஒரு முனை வழிகாட்டு முகமையான காதி மற்றும் கிராம தொழில் ஆணையம் (KVIC) மூலம் செயல்படுத்தப்படுவதுடன் தேசிய அளவிலான ஒற்றை முகமையாக இது செயல்படும். மாநில அளவில், இத்திட்டம் மாநில காதி மற்றும் கிராமத் தொழில் ஆணையம், காதி மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம் மற்றும் மாவட்ட தொழில் மையங்கள் மூலம் வங்கிகள் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2014–15 ம் நிதியாண்டில் , ரூ.2827.69 இலட்சம் மானியமாக 1256 பயனானிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

## 8. வேலையில்லா இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP)

வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டமானது 2011 – ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தப்பட்டு சமூகத்தில் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவைச் சார்ந்த படித்த வேலையில்லாத இளைஞர்களுக்கு உற்பத்தி, சேவை அல்லது வியாபாரம் சார்ந்த குறுந்தொழில்களில் சுயவேலை வாய்ப்பை ஏற்படுத்தி அதன் மூலம் வேலையில்லாத நிலையை நீக்க வழிசெய்கிறது. இத்திட்டத்தில், திட்ட மதிப்பின் 15 விழுக்காடு, 01.04.2014 முதல் 25 விழுக்காடாக உயர்த்தப்பட்ட அரசு மானியமும் உள்ளடங்கிய அதிகபட்ச நிதியுதவியாக உற்பத்தி / சேவை / வியாபார பிரிவு தொழில்களுக்கு முறையே ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம் மற்றும் ரூ.1 இலட்சம் வழங்கப்படுகிறது. மேலும் முதலீட்டாளரின் பங்கு பொதுப் பிரிவுக்கு 10 விழுக்காடும் சிறப்புப் பிரிவுக்கு 5 விழுக்காடும் ஆகும். இத்திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு தமிழக அரசு 2014–15 ம் நிதியாண்டில், ரூ.1817.68 இலட்சம் மானியமாக 3465 பயனானிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

## 9. மாவட்ட தொழில் மையங்கள் மேம்படுத்தும் திட்டம்

மத்திய அரசின் தாராளமயமாக்கல் மற்றும் உலகமயமாக்கல் கொள்கையினைத் தொடர்ந்து, குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் புதுப்புது சவால்களை ஒவ்வொரு ஆண்டும் சந்தித்து வருகின்றன. இவை உலகளாவிய போட்டியினை சமாளிக்கும் திறனுடன் செயல்பட வேண்டி உள்ளது. எனவே மாவட்ட தொழில் மையங்களின் பணிகள் நவீனமயமாக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகிறது.

இதனை நன்கறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 11.5.2012 அன்று சட்டப் பேரவையில், தமிழ்நாடு சட்டப்பேரவை விதி 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில்

- “மாவட்ட தொழில் மையங்களின் பணிகள் நவீன முறையில் சீரமைக்கப்படும் எனவும்,
- ஏற்கெனவே சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்ட தொழில் மைய அலுவலக கட்டடங்கள் தேவைக்கேற்ப நவீன வசதிகளுடன் சீரமைக்கப்படும் எனவும்,
- தேவை உள்ள இடங்களில் கூடுதல் கட்டடம் கட்டித் தரப்படும் எனவும், வாடகை கட்டடங்களில் இயங்கி வரும் மாவட்ட தொழில் மைய அலுவலகங்களுக்கு நவீன வதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டித் தரப்படும் எனவும் அறிவித்தார்.
- மேலும் இம் மையங்களுக்கு தேவையான நவீன கணினி மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் நிறுவப்படுவதுடன், இம் மையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியும் அளிக்கப்படும் எனவும் இப்பணிகள் அனைத்தும் ரூ. 50 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்'' எனவும் அறிவித்தார்.

### 9.1 உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்துதல்

இதனைத் தொடர்ந்து 11 மாவட்ட தொழில் மையங்களுக்கு புதிய கட்டிடங்கள் கட்ட ஒரு மாவட்டத்திற்கு ரூ.1.50 கோடி வீதம் ரூ. 16.50 கோடியும், 18 மாவட்டங்களிலுள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகங்களைப் புனரமைத்தல் மற்றும் கூடுதல் அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு ரூ.22.50 கோடியும் மற்றும் 3 மாவட்ட தொழில் மைய அலுவலக கட்டிடங்களை புனரமைக்க ரூ.2.42 கோடியும் ஆக மொத்தம் ரூ.41.42 கோடியும், மாவட்ட தொழில் மையங்களுக்குத் தேவையான நவீன கணினி மற்றும் தொலை தொடர்பு சாதனங்கள்

நிறுவுதல், மாவட்ட தொழில் மைய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி அளித்தல் உள்ளிட்ட பணிகளுக்கு ரூ.8.58 கோடியும், ஆக மொத்தம் ரூ.50.00 கோடி அனுமதித்து அரசாணை எண்.7, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை நாள் 17.1.2013 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

மேற□படி கட்டிட பணிகளுக்காக ஒதுக்கீடு செய□யப்பட்ட மொத்த தொகை ரூ. 41.42 கோடியில□ ரூ. 40.07 கோடி தொகை பொதுப்பணித்துறை மூலம் செலவிடபட்டுள்ளது.. அனைத்து மாவட்டங்களிலும் கட்டுமானப் பணிகள□ கட்டும் பணி பல□வேறு நிலைகளில□ முடிவுபெறும் தருவாயில் உள்ளது.

மேற்படி பணிகளில் 5 மாவட்ட தொழில் மையங்களில் (திருவாரூர், திருப்பூர், நாகப்பட்டினம், நாமக்கல் மற்றும் தேனி), புதிய கட்டடங்களும், 7 மாவட்ட தொழில் மையங்களில் கூடுதல் கட்டிடங்கள் (கடலூார், திண்டுக்கல், கிருஷ்ணகிரி, சேலம், தஞ்சாவூர், வேலூார் மற்றும் மதுரை) கட்டி முடிக்கப்பட்டு 25.6.2014 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தற்சமயம், நான்கு மாவட்டங்களில் புதிய அலுவலக கட்டிடங்கள் (திருவண்ணாமலை, கருர், சென்னை மற்றும் விழுப்புரம்) 8 மாவட்டங்களில் கூடுதல் அலுவலக கட்டிடங்கள் (தர்மபுரி, ஈரோடு, சிவகங்கை, திருவள்ளுர், திருச்சி, நாகர்கோவில், விருதுநகர் மற்றும் நீலகிரி) மற்றும் 2 மாவட்டங்களில் புதுபிக்கப்பட்ட அலுவலக கட்டிடங்கள் (புதுக்கோட்டை, ராமநாதபுரம்) முடிக்கப்பட்டு, திறந்து வைக்க தயார்நிலையில் உள்ளது.

### 9.2 திறன் மேம்படுத்துதல்

திறன் வளர்ப்பதற்காக அரசு ரூ.3.28 கோடி தொழில் வணிகத் துறையின் 32 மாவட்டத் தொழில் மையங்களில் பணியாற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் மேலாண்மை பயிற்சி வழங்கிட ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் துறை அலுவலர்களை வெளி மாநிலங்கள் மற்றும் வெளி நாடுகளுக்கு அனுப்பி அங்கு செயல்படுத்தப்படும் புதுமையான திட்டங்கள் மற்றும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படும் திட்டங்களை அறிந்து வருவதற்காக பயணத்திட்டங்களை வகுத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்திய அளவில் மற்றும் உலக அளவிலான தொழில் வளர்ச்சியின் தற்போதைய முன்னேற்றங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து அந்தந்த மாவட்டங்களில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த மாவட்ட அளவிளான கருத்தரங்கங்கள் மற்றும் பயிற்சி நடத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

31.03.2015 வரை ரூ.22.00 இலட்சம் செலவில் 283 நபர்களுக்கு தொழில் நுட்ப மற்றும் மேலாண்மை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 9.3 மாவட்டத் தொழில் மையங்களின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் வலுவூட்டுதல்

தமிழ்நாடு தொலை நோக்கு திட்டம் 2023–ல், நமது மாநிலமானது வறுமையற்ற, மிகவும் வளம்பெற்ற மற்றும் வளர்ச்சியடைந்த மாநிலமாகவும் மேலும் மக்கள் நவீன சமுதாயத்தின் அனைத்து அடிப்படை தேவைகளையும் பெற்றிட திட்டமிட்டுள்ளது.

இதனை கருத்தில்கொண்டு அரசுக்கும், தொழில் முனைவோர்களுக்கான தொடர்புகளை எளிமைப்படுத்தவும் மற்றும் சேவைகளின் திறனை மேம்படுத்தவும் மாவட்டத் தொழில் மையங்களின் செயல்பாடுகளை விரைவாக செயல்படுத்த கணினிமயமாக்க திட்டமிடப்பட்டு ரூ.4.80 கோடி ஒதுக்கீடு செய்து அதில் ரூ.15.00 இலட்சம் செலவில் கணினி கள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும் நடைமுறைகளை எளிமைப்படுத்த, அரசானது இணையதள வாயிலான ஒற்றை சாளர முறையில் விண்ணப்பம் செய்து பல்வேறு துறைகளை சார்ந்த ஒப்புதல், உரிமங்கள், அங்கீகாரங்கள் பெறவும் மேலும் புதிய தொழில் முனைவோர் தொழில் நிறுவன மேம்பாட்டுத்

திட்டம் (NEEDS), வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), மற்றும் பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) போன்ற திட்டங்களின் விண்ணப்பங்களை இணையதளம் வாயிலாக பதிவேற்றம் செய்து தொழில் முனைவோர்கள் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலைமையை அறியும் வண்ணம் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**10. மாவட்டத் தொழில□ வளர்ச்சி ஆலோசனை குழு**

புதிதாக அமைக்கப்படும் தொழில□ நிறுவனங்களுக்கு பல□வேறு துறைகளில□ இருந்து உரிமங்கள□ மற□றும் அனுமதிகளை விரைந்து பெற□றுத்தரும் நோக்குடன□ மாவட்ட அளவிலான ஒற□றைச்சாளர தீர்வுக் குழு அமைத்து அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், மேற□படி உரிமங்கள□ மற□றும் அனுமதிகளை பெற எளிய முறையில□ விண்ணப்பிக்க ஏதுவாக பொது விண்ணப்பப்படிவம் ஒன்றினை தமிழக அரசு வடிவமைத்து ஒப்புதல□ வழங்கியுள்ளது.

தொழில□ முனைவோர்களிடமிருந்து உரிமங்கள□ மற□றும் அனுமதிகள□ கோரி முழுமையாக பூர்த்தி செயது பெறப்பட்ட விண்ணங்களை அந்தந்த மாவட்டத்திலுள□ள மாவட்ட தொழில□ மைய பொது மேலாளர்கள□ சம்பந்தப்பட்ட துறைகளுக்கு உரிய காலத்தில□ ஒப்புதல□ வழங்க வேண்டி அனுப்பி வைக்கப்படும். அந்த விண்ணப்பங்களுக்கு அனுமதி மற்றும் உரிமம் வழங்குவதில் காலதாமதம் ஏற□படும் பட்சத்தில□, அவ□விண்ணப்பங்கள□ மாவட்ட ஆட்சியர் தலைமையில□ நடத்தப்படும் ஒற□றை சாளர தீர்வுக் குழுவில□ விவாதிக்கப்பட்டு, விரைந்து தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்படும். இருப்பினும் இத்தீர்வுக் குழுவிற□கு போதிய அதிகாரம் வழங்கப்பட்டு அதனுடைய பணிகளை மேலும் வலுவுள□ளதாக்குதல□ அவசியமாக கருதப்பட்டது.

தமிழக அரசு அதனை கருத்தில் கொண்டு, ‘‘மாவட்ட அளவிலான தொழில□ வளர்ச்சி ஆலோசனை குழு’’ ஒன்றினை அரசாணை எண் 53, குறு, சிறு மற□றும் நடுத்தரத் தொழில□

நிறுவனங்கள (டி2) துறை, நாள 27.12.2012–ன படி அமைத்திட ஆணை வழங்கியது. இவவாணையினபடி, தொழில தொடங்க தேவையான உரிமங்கள மறறும் அனுமதிகளைப் பெறுவதறகு குறு, சிறு மறறும் நடுத்தரத் தொழில நிறுவனங்கள தங்கள விண்ணப்பங்களை உரிய படிவத்தில அந்தந்த மாவட்டத் தொழில மையப் பொது மேலாளரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி வழங்கும் துறைகளுக்கு நேரிடையாக பெறப்பட்ட விண்ணப்பங்களின மீது நடவடிக்கை எடுத்த விவரங்களை இவவாலோசனைக் குழுவிறகு மாதம்தோறும் தெரிவிக்கப்பட வேண்டும்.

இப்புதிய முறைப்படி தொழில முனைவோர்களிடமிருந்து துறை அலுவலகங்களில் உரிமம் மற்றும் அனுமதிகள் வேண்டி பெறப்பட்ட நாளிலிருந்து உரிய கால அவகாசமான 30 நாட்களுக்குள அனுமதி மற்றும் உரிமம் வழங்கப்பட வேண்டும். எனினும் இக்கால அவகாசம் எக்காரணத்தைக் கொண்டும் 60 நாட்களுக்கு மிகாமல இருத்தல வேண்டும். தமிழநாடு மாசுக்கட்டுப்பாடு வாரியத்தால குறு, சிறு மறறும் நடுத்தரத் தொழில நிறுவனங்களுக்கு வழங்கப்படும் புதிய அனுமதிகளும் இக்குழுவின பரிசீலணைக்கு உட்படுத்தப்படும்.

உரிய காலத்தில சம்பந்தப்பட்ட துறைகளால உரிமங்கள மறறும் அனுமதிகள வழங்கப்படாத குறு, சிறு மறறும் நடுத்தர தொழில நிறுவனங்களின விண்ணப்பங்கள இக்குழுவின பரிசீலனைக்காக அடுத்த கூட்டத்தில விவாதிக்கப்பட்டு தீர்வு காணப்படும். 2014–15 ஆம் ஆண்டில இக்குழு வாயிலாக பெறப்பட்ட 695 விண்ணப்பங்களில 649 விண்ணப்பங்களுக்கு தீர்வு காணப்பட்டுளளன.

## 11. குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் வசதியாக்கக் குழுக்கள்

குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள், பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து தாங்கள் விற்பனை செய்த பொருள்களுக்கு உண்டான தொகையை கால தாமதமின்றி உடன்

பெற்றுத்தர போதிய வாய்ப்புகளை உருவாக்குவது குறு, சிறு மற�றும் நடுத்தரத் தொழில� நிறுவனங்கள் மேம்பாட்டுச் சட்டம் 2006 ன்–நோக்கங்களில் ஒன்றாகும்.

எனவே, இது சம்பந்தமாக அரசு சென்னை, திருச்சி, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நான்கு மண்டலங்களில் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கான வசதியாக்கக் குழுக்களை அமைத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் 27 வசதியாக்கக் குழு கூட்டங்கள் நடத்தப்பட்டு 45 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையாக சுமார் ரூ. 233.93 இலட்சம் பெற்றுத் தரப்பட்டுள்ளது.

| வருடம் | கு.சி.தொ.நி. வசதியாக்க குழு அமர்வுகள் | தீர்வு காணப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | பெறப்பட்ட நிலுவை தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2011–2012 | 15 | 38 | 233.86 |
| 2012–2013 | 35 | 115 | 396.65 |
| 2013–2014 | 15 | 62 | 556.52 |
| 2014–2015 | 27 | 45 | 233.93 |

## 12. பகுப்பாய்வு, சேவை மற்றும் உற்பத்தி வசதிகள்

### (அ) இரசாயன பரிசோதனைக் கூடங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் விரிவான பரிசோதனை தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, தொழில் வணிகத் துறையின் கீழ் கிண்டி மற்றும் மதுரை, கோவை, சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஐந்து பரிசோதனைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த ஆய்வுக் கூடங்களில் நவீன பரிசோதனை உபகரணங்கள் நிறுவப்பட்டு அனைத்து வகையான தொழிலக மூலப்பொருட்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஒரே இடத்தில் பரிசோதனை செய்யும் வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக்கூடங்கள் கட்டுமானப் பொருட்களான இரும்பு கம்பிகள், சிமெண்ட், மணல், ஜல்லி, தண்ணீர், கான்கிரீட் கியூப்ஸ், செங்கல் மற்றும் இரசாயனப் பொருட்களான

பிளிச்சிங் பவுடர், கணிமம், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் உலோகங்கள் பரிசோதனை செய்து தொழிலகங்களுக்கு சான்றிதழ் வழங்கி வருகிறது. சேலத்திலுள்ள மண்டல சோதனை ஆய்வுக் கூடம், இந்த மாவட்டத்தில் குழுமமாக அமைந்துள்ள ஸ்டார்ச் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் ஸ்டார்ச் மற்றும் சேகோ பொருட்களின் பரிசோதனைகளை செய்வதில் தனித்தகுதி பெற்றுள்ளது. தூத்துக்குடியில் உள்ள மண்டல சோதனை ஆய்வுக் கூடம், இந்த மாவட்டத்தில் குழுமமாக அமைந்துள்ள உப்பு மற்றும் உப்பு சார்ந்த பொருட்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் உப்பு மற்றும் உப்பு சார்ந்த பொருட்களின் பரிசோதனைகளை செய்வதில் தனித்தகுதி பெற்றுள்ளது.

தொழில் நிறுவனங்களுக்கு குறைந்த பரிசோதனைக் கட்டணத்தில் பரிசோதனை செய்வதுடன், தொழில் வணிகத்துறையால் வழங்கப்படும் தொழில் முனைவோர் பதிவறிக்கை பகுதி-IIபெற்றுள்ள குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு 50 சதவீதம் சலுகைக் கட்டணத்தில் பரிசோதனை சேவையினை வழங்கி வருகிறது.

**ஆய்வுக் கூடங்கள் வாரியாக கடந்த 4 ஆண்டுகளின் செயல்திறன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.**

(ரூ. லட்சத்தில்)

| வ. எண். | அலகு | 2011-12 | | 2012-2013 | | 2013-14 | | 2014–2015 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ஈட்டப் பட்ட வருவாய் | பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ஈட்டப் பட்ட வருவாய் | பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ஈட்டப் பட்ட வருவாய் | பரிசோதனை செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை | ஈட்டப் பட்ட வருவாய் |
| 1 | இரசாயணப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், சென்னை. | 8775 | 35.56 | 11610 | 39.06 | 12897 | 43.31 | 14766 | 60.29 |
| 2 | மண்டல பரிசோதனை கூடம், மதுரை. | 17617 | 50.76 | 26742 | 78.77 | 35947 | 101.36 | 29086 | 83.80 |
| 3 | மண்டல பரிசோதனைகூடம், கோயம்–புத்தூர். | 10529 | 28.42 | 10633 | 33.24 | 11212 | 32.63 | 9196 | 27.02 |
| 4 | மண்டல பரிசோதனைகூடம், சேலம். | 11190 | 26.68 | 16488 | 41.39 | 14769 | 46.41 | 15179 | 45.76 |
| 5 | மண்டல பரிசோதனை கூடம், | 4583 | 11.62 | 6506 | 17.56 | 6626 | 20.26 | 5199 | 16.22 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தூத்துக்குடி. | | | | | | | | |
| | மொத்தம் | **52694** | **153.04** | **71979** | **210.02** | **81451** | **243.97** | **73426** | **233.09** |

### (ஆ) பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்

விருத்தாசலத்திலுள்ள பீங்கான் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம், பீங்கான் தொழில் நுட்பவியலில் பட்டயப்பயிற்சி நடத்திவருகிறது. இதன் பயிற்சிக் காலம் மூன்றரை ஆண்டுகள் ஆகும். ஒவ்வொரு ஆண்டும் பத்தாம் வகுப்பு தேறிய 50 மாணவர்கள் முதலாமாண்டிலும், பன்னிரண்டாம் வகுப்பு தேறிய 10 மாணவர்கள் இரண்டாம் ஆண்டில் பிற்சேர்க்கையாகவும் இக்கல்லூரியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்பயிற்சி நிலையம் அகில இந்திய தொழில் நுட்பக் கழகத்தின் அனுமதி பெற்று தொழில்நுட்பப் இயக்ககத்தின் கீழ் இணைந்து இயங்கி வருகிறது. இவ்வகையில் தமிழ்நாட்டில் ஒரே நிறுவனமான இந்நிறுவனம் நல்ல ஆய்வுக்கூட வசதியுடன் பீங்கான் மூலப் பொருட்களை பரிசோதனை செய்யும் பணியை மேற்கொள்கிறது. பீங்கான் தொழிற்சாலைகள் நிறைந்த இப்பயிற்சி மையம் அமைந்திருப்பதால் இங்கு பயின்ற மாணவர்கள் வெகு எளிதாக தொழில் நுட்ப அறிவைப் பெற முடிகிறது.

2014–2015 ஆம் ஆண்டில், பகுதி II திட்டத்தின் கீழ் விருத்தாசலம், பீங்கான் தொழில்நுட்ப பயிற்சி மையத்தில் பீங்கான் பொருட்கள் காட்சியகம் மற்றும் தகவல் மையம் ரூ. 6.15 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது.

### (இ) அரசினர் பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம்

பீங்கான் தொழிற்சாலைகளின் வளர்ச்சிக்கு ஊக்குவிக்கும் பொருட்டு தனித்துவமாக பீங்கான் தொழிற்பேட்டை விருத்தாசலத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்த தொழிற்பேட்டையில்

64 தொழிற்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை தொழில் முனைவோருக்கு சதுர அடிக்கு ரூ. 1.75 (ரூபாய் ஒன்று மற்றும் பைசா எழுபத்தைந்து மட்டும்) என்ற மாத வாடகையின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றன. தொழில் நிறுவனங்களின் பீங்கான் பொருட்கள் சுடும் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் குழும அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பொது வசதி மையத்தில் ஒரு சுரங்கச் சூளை அமைக்க இரண்டு தொழிற்கூடங்கள் மிக குறைந்த குத்தகை தொகை வருடத்திற்கு ரூ. 500/– ஒரு தொழிற்கூடத்திற்கு என்ற அடிப்படையில் அரசால் வழங்கப்பட்டு தற்போது சுரங்கச் சூளை இயங்கி வருகிறது. இத்தொழிற்பேட்டையில் குறைந்து அழுத்த இன்சுலேட்டர்கள், பீங்கான் பொம்மைகள், உயர் வெப்பம் தாங்கக் கூடிய செங்கற்கள் போன்ற பீங்கான் பொருட்கள் தயாரிக்கும் தொழிற்கூடங்கள் அமைந்துள்ளன.

**(ஈ) அரசினர் அறிவியல் கண்ணாடி பயிற்சி மையம், கோயம்புத்தூர்**

அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிப்பதில் இரண்டாண்டு செயல்முறை பயிற்சி வழங்கும் மையம் கிண்டியில் இயங்கி வந்தது. இந்த பயிற்சியில் சேர மாணவர்கள் குறைவாக இருந்த காரணத்தால் இப்பயிற்சி மையம் கோயம்புத்தூருக்கு மாற்றப்பட்டுள்ளது. தற்போது மற்ற நிறுவனங்களில் குறுகிய கால பயிற்சிகள் வழங்கப்படுவதை கருத்தில் கொண்டு இப்பயிற்சி நிலையத்தில் வழங்கப்படும் பயிற்சியினை தற்போதைய சூழ்நிலைக்கேற்ப மாற்றி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**(உ) அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்**

கோயம்புத்தூரில் இயங்கி வரும் அரசு அறிவியல் கண்ணாடி கருவிகள் உற்பத்தி மையம் பரிசோதனை கூடங்களுக்கு தேவையான அறிவியல் கண்ணாடி உபகரணங்கள் தயாரித்து இயங்கி வருகிறது. இந்த உற்பத்தி மையத்தில் தயாரிக்கப்படும் கண்ணாடி கருவிகள் சுகாதாரத் துறை, தடய அறிவியல் துறை மற்றும் வேளாண்மை துறை ஆய்வகங்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

**(ஊ) மத்திய மின் பொருள்கள் சோதனை கூடம், காக்களூர், திருவள்ளூர் மாவட்டம்**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள காக்களூரில் குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்கள் மற்றும் தரக்குறியீடு நிறுவனங்களின் தேவைக்கிணங்க மாநிலஅரசால் 1973–ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மத்திய மின் பொருள் சோதனைக்கூடம், இந்திய தர நிர்ணய மையம் (பி.ஐ.எஸ்) மற்றும் சோதனைக் கூடங்களுக்கான தேசிய அங்கீகாரக் குழுமம் (என்.எ.பி.எல்) ஆகியவற்றினால் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. இந்த சோதனைக் கூடத்தில் 160 க்கும் மேற்பட்ட மின் உபகரணங்கள் மற்றும் மின் சாதனங்கள் இந்திய தரக்குறிப்பேட்டின் வழிகாட்டுதலுக்கு இணங்க சோதனை செய்து வருகின்றது.

இந்த ஆய்வுகூடத்தின் பல்வேறு சோதனை அங்கீகாரங்களை தொடர்ந்திட ஏதுவாக, மாநிலத்தில் உள்ள குறு, சிறு மற்றும் நடுத்தர மின் மற்றும் மின்னணு தொழில் முனைவோர்கள் பயன்பெறும் பொருட்டு தொடர்ச்சியாக மேம்படுத்தப்பட்டு வருகிறது.

தரக்கட்டுபாடு ஆணை செயலாக்க மைய அதிகாரிகளால் சந்தையில் சேகரிக்கப்படும் மின்பொருட்களும் இவ் ஆய்வுக்கூடத்தில் சோதனை செய்யப்படுகின்றன. தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனை வழங்கும் நிலையமாகவும் இந்த ஆய்வுக்கூடம் விளங்குகிறது.

மத்திய மின் பொருள்கள் சோதனைக்கூடம், காக்களூரின் கடந்த 4 ஆண்டு சாதனை விவரம் கீழ்கண்டவாறு ஆகும்.

| வ. எண் | பணி விவரம் | 2011 –12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|
| 1. | பரிசோதனை மாதிரிகள் (எண்ணிக்கை) | 6327 | 5998 | 5841 | 5333 |
| 2. | சோதனை கட்டணங்கள் (ரூபாய் இலட்சத்தில்) | ரூ.183.69 | ரூ.212.68 | ரூ. 239.08 | ரூ.185.41 |

**13. மின் உற்பத்தி பொருள்களை சோதனை செய்வதற்கான பயிற்சி அளித்தல்**

மின்பொருள்களின் தரத்தினை மேம்படுத்தும் நோக்கத்தோடு உற்பத்தியாளர்களுக்கு இவ் ஆய்வுக்கூடத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி, இத்துறையின் தொழில் நுட்ப அலுவலர்களால் அளிக்கப்படுகிறது. இவ் ஆய்வுக்கூடத்தில் அமைந்துள்ள சோதனை வசதிகள் பயிற்சியாளர்களுக்கு செயல்முறை பயிற்சி அளிக்கவும் பயன்படுத்தப்படுகிறது. இதுவரையில் வெவ்வேறு நிறுவனங்களிலிருந்து பங்குபெற்ற 277 பயிற்சியாளர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

கீழ்கண்ட மின்பொருள்களை சோதனை செய்வதற்க்குண்டான பயிற்சிகள் அளிக்கப்படுகிறது.

1. பி.வி.சி. கம்பி வடங்கள், 2. மிக்சிகள் , 3. மின் விசிறிகள் 4. சுவிட்ச்கள் 5. ப்ளக்ஸ் மற்றும் ஸாக்கெட்டுகள் 6. ப்ளோரோசென்ட் குழல் விளக்குகள் 7. ப்ளோரோசென்ட் குழல் விளக்குக்குண்டான ஸ்டார்ட்டர்கள் 8. ப்ளோரோசென்ட் குழல் விளக்குக்குண்டான சோக்குகள் 9. மின் அளவு மானிகள் 10. இம்மர்சன் வாட்டர் உறீட்டர்கள் 11. ஸ்டோரேஜ் வாட்டர் உறீட்டர்கள் 12. பி.வி.சி குழாய்கள் மற்றும் 13. மின் பொருத்தி சாதனங்கள்.

**14. பயிற்சி நிலையங்கள்**

i. **அரசினர் தொழில் நுட்ப பயிலகம், கிண்டி,சென்னை.**

கிண்டி, அரசினர் தொழில் நுட்ப பயிலகம் 1962–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த 50 ஆண்டுக்கு மேலாக இப்பயிலகம் பொறியியல் கல்வியில் மூன்று ஆண்டு பட்டயப்படிப்பு கீழ்க்கண்ட துறையில் வழங்கி வருகிறது.

1. கருவி மற்றும் அச்சு பொறியியல்
2. குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல்

மேலும், இப்பயிலகத்தை மேம்படுத்துவதற்காக கடந்த 2012–2013–ஆம் ஆண்டு 120 இலட்சம் ஒதுக்கீடு செய்து உள்கட்டமைப்பு பணி 2013–14 ம் ஆண்டு முடிக்கப்பட்டது. இதன் மூலம் 2013–2014–ஆம் ஆண்டில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க வழிவகை

செய்யப்பட்டுள்ளது. கருவி மற்றும் அச்சு படிப்பில் **40** மாணவர்கள் என்பதை **60** மாணவர்கள் என்றும் குளிர்சாதனம் மற்றும் காற்று பதன பொறியியல் படிப்பில் **30** மாணவர்கள் என்பதை **60** மாணவர்கள் என்றும் உயர்த்தப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் **2014–15** ம் ஆண்டு முதல் இடைசேர்க்கை மூலம் ஆண்டிற்கு **24** மாணவர்கள் கூடுதலாக சேர்க்கப்பட்டு மூன்று ஆண்களுக்கும் சேர்ந்து மொத்தம் **408** மாணவர்களுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனம் வழங்கும் பட்டயப்படிப்பு AICTE–யின் அங்கீகாரம் பெற்றும் நடத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழக சட்டப் பேரவையில் விதி எண்**110**ன் கீழ் **24.07.2014** அன்று, தமிழ்நாடு அரசு தொழில் நுட்ப பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை–**32**ல் புதிய கூடுதல் கட்டிடம் சுமார் **30000** சதுர அடியில் கட்டுவதற்கு அரசு ரூ.**9.00** கோடியை ஒதுக்கி அறிவிப்பு செய்துள்ளதுள்ளார்கள். இந்த கூடுதல் கட்டிடம் அனைத்திந்திய தொழில்நுட்ப கல்வி கழகத்தினுடைய நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் வண்ணம் மேற்படி பயிற்சி நிலையத்தில் தொழில்நுட்ப பட்டய படிப்பு அங்கீகாரம் பெறுவதற்கு அவசியமானதாகும்.

மேலும் மேற்படி அறிவிப்பின்படி, அரசாணை எண்.**15**,MSME(E) துறை, நாள்.**18.02.2015** தேதியில் ரூ.**7,02,50,000/–** பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பொதுபணித்துறை முலம் **06.05.2015** முதல் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்பட்டு நடைப்பெற்று வருகிறது.

ii. **கருவி பொறியியல் பயிலகம், திண்டுக்கல்**

திண்டுக்கல் கருவி பொறியியல் பயிலகம் **1961–**ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. கடந்த **50** ஆண்டுகளுக்கு மேலாக இப்பயிலகம் பொறியியல் பட்டயப்படிப்பில் **3** ஆண்டு கருவி மற்றும் அச்சு பட்டயப்படிப்பை வழங்கி வருகின்றது. இந்நிறுவனத்தின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக அரசு **2012–2013–**ல் **95** லட்சத்தை ஒதுக்கீடு செய்யப்பட்டு,

உட்கட்டமைப்பு வசதி மேம்படுத்தும் பணி 2013–14 ம் ஆண்டு முடிக்கப்பட்டது 2014–15 ஆம் ஆண்டில் 3 ஆண்டு பட்டயப்படிப்பிற்காக முதலாம் ஆண்டில் 45 மாணவர்கள் மற்றும் இரண்டாம் ஆண்டு பின்சேர்க்கை மூலம் 9 மாணவர்கள் சேர்க்கப்பட்டு மூன்று ஆண்களுக்கும் சேர்ந்து மொத்தம் 154 மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. இந்த நிறுவனம் வழங்கும் பட்டயப்படிப்பு AICTE–யின் அங்கீகாரம் பெற்றும் நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிலகத்தில் படிப்பை முடிக்கும் அனைத்து மாணவர்களும் முழுமையான அளவில் வேலை வாய்ப்பை பெற்று வருகின்றனர்.

**15. வீட்டு உபயோக மின்பொருள்களின் தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மையம், சென்னை.**

மத்திய அரசினால் அவ்வப்போது பல்வேறு சட்டங்களின் அடிப்படையில் வெளியிடப்படும் பல்வேறு தரக்கட்டுப்பாடு ஆணைகளை செயல்படுத்திட மாநில அரசு தொழில் வணிகத்துறையின் கீழ் தரக்கட்டுப்பாடு ஆணை செயலாக்க மையம் அமைத்துள்ளது. 1981 ஆம் ஆண்டு தரக்கட்டுப்பாட்டு ஆணை மற்றும் மின்கம்பிகள் மற்றும் வடங்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் மற்றும் மின் பாதுகாப்புக் கருவிகள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் (தரக்கட்டுப்பாடு) ஆணை 2003 ஆகிய இரண்டு ஆணைகளை இம்மையம் அமல்படுத்துகிறது. மேற்கூறிய முதல் ஆணையினை மீறி செயல்படுவது அத்தியாவசியப் பொருட்கள் சட்டம் 1955–இன்படி தண்டனைக்குரியதாகும். இரண்டாவது ஆணை இந்திய தரக்குறியீடு முத்திரை (ஐ.எஸ்.ஐ.) இல்லாத குறிப்பிட்ட சில மின் பொருட்களைத் தயாரிப்பதையும், அவற்றை விற்பனைக்கு இருப்பு வைப்பதையும் அல்லது விநியோகிப்பதையும் தடை செய்கிறது. இந்த ஆணைக்கு எதிர்மாறாகச் செயல்படுவது இந்திய தர நிர்ணய (பி.ஐ.எஸ்) 1986 சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியதாகும். இந்த ஆணைகளை அமல்படுத்த “உரிய அலுவலர்” ஆக மாவட்டங்களில் அந்தந்த மாவட்ட தொழில் மைய பொது மேலாளர்களும், சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரை துணை இயக்குநர் (மின் மற்றும் மின்னணு) தரக்கட்டுப்பாடு மையம், சென்னை அவர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**<u>தரக்கட்டுப்பாடு ஆணை 2003—இன் மீதான</u>**
**<u>கடந்த 4 ஆண்டுகளின் செயல்பாடு கீழ்க்கண்டவாறு ஆகும்</u>**

| வ.எண். | விபரம் | 2011 –12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|
| 1. | ஆய்வுகள் | 1961 | 2013 | 1963 | 1982 |
| 2. | பறிமுதல்கள் | 55 | 52 | 76 | 60 |

**<u>தரக்கட்டுப்பாடு ஆணை 1981—இன் மீதான கடந்த</u>**
**<u>4 ஆண்டுகளின் செயல்பாடு கீழ்க்கண்டவாறு ஆகும்.</u>**

| வ. எண். | விபரம் | 2011 –12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|
| 1. | நிரந்தர உற்பத்தியாளர் சான்றிதழ் | 19 | 9 | 21 | 17 |
| 2. | தற்காலிக உற்பத்தியாளர் சான்றிதழ் | 8 | 4 | 16 | 14 |
| 3. | சோதனை மாதிரிகள் சேர்க்கை | 2634 | 3432 | 3512 | 3864 |
| 4. | பதிவு எண்ணிக்கை | 1407 | 2079 | 1982 | 2976 |

## 16. தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையினை மேம்படுத்தும் நோக்கத்தினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் அமைக்கப்பட்டன. நலிந்தப் பிரிவினர்கள் குறிப்பாக ஊரக கைவினைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் பாட்டாளிகள் ஆகியோர்களை சுரண்டல் போக்குகளிலிருந்து பாதுகாப்பது முக்கிய சமூக குறிக்கோளாக இருப்பினும், அதன் மூலம் அவர்களுக்கு ஆதாயகரமான வேலைவாய்ப்பினை உருவாக்குவதோடு, செல்வங்களை அனைத்து

பிரிவினர்களுக்கும் பரவலாக்குவது பொருளாதார குறிக்கோளாகும். தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் அவர்கள் மாநிலத்திலுள்ள தொழிற் கூட்டுறவு சங்கங்களின் செயற்பதிவாளர் ஆவர். சிறு தேயிலை விவசாயிகள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு விவசாயிகள் தங்களது விவசாய பொருட்களுக்கு ஆதாயகரமான விலையினை பெற்றுத்தருவதில் இவ்வகையான தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பெரிதும் உதவுகின்றன. கூட்டுறவு தொழிற்பேட்டைகள் அமைப்பதன் மூலம் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற் கட்டடங்கள் ஆகியவற்றை சிறு தொழில் முனைவோர்கள் பெறுவதோடு அல்லாமல், அனைத்து அடிப்படை வசதிகளையும் பெற்று, தங்களுடைய தொழில் நடவடிக்கைகளை சுமூகமான சூழ்நிலையில் மேற்கொள்கின்றனர். இத்துறையின் கீழ் தற்பொழுது மொத்தம் 314 தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 259 சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன. 2014–15ஆம் ஆண்டில் அனைத்து சங்கங்களும் ரூ.900.79 கோடி மதிப்பிற்கு விற்பனை எய்தி, ரூ.18.71 கோடியை இலாபமாக ஈட்டியுள்ளன.

## 17. தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள்

நீலகிரி மாவட்டத்தின் முக்கியமான தொழிலாக விளங்கும் தேயிலைத் தொழில், மாநிலத்தில் உள்ள 63,000 சிறு தேயிலை விவசாயிகளின் நல்வாழ்விற்கு தேவையானவற்றை பூர்த்தி செய்வதாகவும் உள்ளது. ஆரம்பத்தில் சிறு தேயிலை விவசாயிகள் தங்களுடைய பசுந்தேயிலையை தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு வழங்கி வந்ததில் பல்வேறு இடர்பாடுகளை குறிப்பாக குறைந்த விலை, அதிக நிராகரிப்பு, அளவிடுவதில் முறைகேடுகள் ஆகியவற்றை சந்தித்து வந்தனர். இதன் காரணமாக, அரசு தலையிடும் சூழ்நிலை ஏற்பட்டு அதன் மூலம் கூட்டுறவு அமைப்பில் தேயிலை தொழிற்சாலைகள் உருவாகின. இக்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் சிறு தேயிலை விவசாயிகள் தங்களுடைய விவசாய பொருட்களுக்கு ஆதாயகரமான விலை பெறுவதில் மகத்தான உதவிகளை செய்து வருகின்றன. தவிர, இத்தொழிற்சாலைகள் தங்களுடைய உறுப்பினர்களுக்கு உரம், நாற்றுகள் மற்றும் தேயிலைப் பைகள் ஆகியவற்றை வழங்கும் சேவைகளையும் செய்து வருகின்றன.

தற்பொழுது நீலகிரி மாவட்டத்தில் **15** தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள் ஆண்டொன்றிற்கு **188** இலட்சம் தேயிலைத் தூள் உற்பத்தி செய்யும் திறன் கொண்டு செயல்பட்டு வருகின்றன. கடந்த **2013–14**ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்ட நவீனப்படுத்தும் திட்டத்தின் காரணமாக, மேற்கண்ட அதிக அளவு உற்பத்தி செய்யும் திறனை அடைய ஏதுவானது. **2014–15**ஆம் ஆண்டில், இத்தொழிற்சாலைகள் அனைத்தும் **160.01** இலட்சம் கிலோ தேயிலைத் தூளினை உற்பத்தி செய்து, ரூ.**98.23** கோடி மதிப்பிற்கு விற்பனை அடைந்துள்ளன.

கடந்த **3** ஆண்டுகளில் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | தேயிலை தொழிற் சாலைகளின் எண்ணிக்கை | தேயிலைத் தூள் உற்பத்தி (இலட்சம் கிலோவில்) | விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | இலாபத்தில் இயங்கும் தொழிற் சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2012-13 | 15 | 164.96 | 14055.22 | 15 |
| 2013-14 | 15 | 179.11 | 13346.07 | 9 |
| 2014-15 | 15 | 160.01 | 9822.58 | 1 |

## 18. இன்ட்கோசர்வ்

நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு அமைப்பின் கீழ் பல தேயிலை தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்ட பின்பு, இத்தொழிற்சாலைகளின் பணிகளை ஒருங்கிணைத்து, செயல்படுத்த ஒரு தலைமைச் சங்கம் அமைப்பதற்கான தேவை ஏற்பட்டது. இதனை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு ‘‘இன்ட்கோசர்வ்’’ என அழைக்கப்படும் தமிழ்நாடு தேயிலை சிறு விவசாயிகள் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளின் இணையம் **1965**ஆம் ஆண்டில் குன்னூரில் ஏற்படுத்தப்பட்டது. தனது உறுப்பினர் சங்கங்களுக்கு தேவையான பொருட்களை கொள்முதல் செய்து வழங்குவதோடு அல்லாமல், இத்தலைமைச் சங்கமானது உறுப்பினர் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளை சந்தைப்படுத்தி நல்ல விலை கிடைக்க

செய்யவும் உதவி செய்கிறது. இச்சங்கம் தனது உறுப்பினர் தொழிற்சாலைகளுக்கு குன்னூர், கோயம்புத்தூர் மற்றும் கொச்சி ஆகிய இடங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளையும் வழங்கி வருகிறது. மேலும், இச்சங்கம் ''ஊட்டி டீ'' என்ற பெயரில் தேயிலைத் தூள் தயாரித்து, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள நியாயவிலைக் கடைகள் மூலம் விற்பனை செய்து வருகிறது. இதன் மூலம் தேயிலைச் சந்தையில் நீலகிரி மாவட்ட தேயிலைத்தூளுக்கு அதிக விற்பனை விலை கிடைக்க செய்வதுடன், பொதுமக்களுக்கு தேயிலைத் தூள் மலிவான விலையில் கிடைத்திடவும் வழிவகுத்தது. 2014–15 ஆம் ஆண்டில், இச்சங்கமானது ரூ.42.97 கோடி மதிப்புள்ள 3469 மெட்ரிக் டன் அளவு ஊட்டி டீ யை விற்பனை செய்து அதன் மூலம் ரூ.431.72 இலட்சம் இலாபம் அடைந்துள்ளது.

இண்ட்கோசர்வின் கடந்த 3 ஆண்டு கால செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | விற்பனை அளவு (மெட்ரிக் டன்னில் ) | விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில் ) | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2012-13 | 3932 | 3966.90 | 64.89 |
| 2013–14 | 4115 | 5084.62 | 371.30 |
| 2014-15 | 3469 | 4296.76 | 431.72 |

**19. டீசர்வ்**

தேயிலைத் தூள் விற்பனை முறையில் நிலவி வந்த இடைத்தரகர்கள் முறையை நீக்கி, வெளிப்படையான தன்மையை ஏற்படுத்தும் நோக்கத்தோடும், தேயிலைத் தூளின் முதன்மை சந்தையில் சிறப்பானதொரு விலை கண்டுப்பிடிப்பு நெறிமுறைகளை ஏற்படுத்தி, அதன் மூலம் தேயிலைத் தூள் உற்பத்தியாளர்களுக்கு தாங்கள் உற்பத்தி செய்யும் தேயிலைத் தூளுக்கு ஆதாயகரமான விலைக் கிடைக்கும் பொருட்டும் தேயிலை உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கம் (டீசர்வ்) என்ற பெயரில் மின்னணு தேயிலை ஏல மையம் ஒன்று குன்னூரில்

**28.08.2002**ஆம் நாளன்று பதிவு செய்யப்பட்டு, **01.10.2004**ஆம் நாளன்று தனது பணியை துவங்கியது. தொழிற் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகள், தனியார் தொழிற்சாலைகள், எஸ்டேட் தொழிற்சாலைகள் மற்றும் டான்டீ தொழிற்சாலைகள் டீசர்வின் உறுப்பினர்களாக உள்ளன. **2014–15**ஆம் ஆண்டில், டீசர்வானது தனது ஏல மையத்தின் மூலம் ரூ.**98.49** கோடி மதிப்பிலான **175.88** மெட்ரிக் டன் தேயிலைத் தூளினை விற்பனை செய்துள்ளது. தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வரும் இச்சங்கம், இதே ஆண்டின் காலத்தில் ரூ.**12.77** இலட்சத்தை இலாபமாக அடைந்துள்ளது.

டீசர்வின் கடந்த **3** ஆண்டு கால செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | விற்பனை அளவு (இலட்சம் மெட்ரிக் டன்னில்) | விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | இலாபம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| | | | |
| 2012-13 | 170.88 | 14578.74 | 8.80 |
| 2013-14 | 167.38 | 13772.59 | 22.20 |
| 2014-15 | 175.88 | 9848.93 | 12.77 |

## 20. சேகோசர்வ்

சேகோசர்வ் என்று அழைக்கப்படும் சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் இந்தியாவிலேயே வெற்றிகரமாக செயல்பட்டு வரும் கூட்டுறவு சங்கங்களில் ஒன்றாகும். சவ்வரிசி மற்றும் கிழங்கு மாவு ஆகிய பொருட்களை சந்தைப்படுத்துவதில் நிலவி வந்த இடைத்தரகர்களின் சுரண்டலை அறவே நீக்கி, அவர்களின் பிடியிலிருந்து உற்பத்தியாளர்களை விடுவித்து, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு நல்ல விலை கிடைக்கப் பெற செய்யும் நோக்கோடு இச்சங்கம் **21.07.1981** அன்று பதிவு செய்யப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கம் தமது உறுப்பினர் உற்பத்தியாளர்களின் பொருட்களை சந்தைப்படுத்துவதோடு மட்டுமின்றி, நிதியுதவி மற்றும்

சேமிப்பு கிடங்கு வசதி போன்ற சேவைகளையும் செய்து தருகிறது. சேகோ பொருட்களில் மேற்கொள்ளப்படும் கலப்படங்களை தடுத்திடும் பொருட்டும், பொருட்களின் தரப்பரிசோதனைகளை முறைப்படுத்தி நெறிப்படுத்தும் பொருட்டும் இச்சங்கமானது குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மைய அரசின் நிதியுதவியுடன் பொது வசதி மையத்தின் அங்கமாக பகுப்பாய்வுக் கூடம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தின் மூலம் விற்பனை செய்யப்படும் அனைத்து சேகோ பொருட்களும் இப்பகுப்பாய்வுக் கூடத்தின் மூலம் தரப்பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. **2014–15**ஆம் ஆண்டில், இச்சங்கமானது ரூ.**472.06** கோடி மதிப்பிற்கு விற்பனை எய்தி, ரூ.**2.69** கோடியை இலாபமாக அடைந்துள்ளது.

சேகோசர்வின் கடந்த **3** ஆண்டு கால செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | விற்பனை | | நிகர இலாபம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| | எண்ணிக்கை (மூட்டைகள்) | மதிப்பு (ரூபாய் கோடியில்) | |
| | | | |
| 2012-13 | 12,91,842 | 354.48 | 0.99 |
| 2013-14 | 10,69,140 | 492.82 | 1.91 |
| 2014-15 | 12,08,361 | 472.06 | 2.69 |

## 21. தாய்கோ வங்கி

தொழிற் கூட்டுறவு சங்கங்களின் நிதி மற்றும் கடன் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, தாய்கோ வங்கி என்று அழைக்கப்படும் தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி **1961–**இல் தொடங்கப்பெற்றது. இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் செயல்பட்டு வரும் இவ்வங்கி நகைக் கடன், சிறு தொழில் கடன், அதிகப்பற்றுக் கடன், தனிநபர் கடன், வீடு அடமானக் கடன் போன்ற பல்வகைக் கடன்களை பொது மக்கள் மற்றும் இதர பிரிவினர்களுக்கும் வழங்கி வருகிறது. வைப்புத் தொகைகளை பெறுவதோடு அல்லாமல், சேமிப்புக் கணக்கு மற்றும் நடப்புக் கணக்கு ஆகிய வசதிகளையும் பொது மக்களுக்கு

ஏற்படுத்தித் தருகிறது. அரசுத் திட்டங்களான தாட்கோ, டாம்கோ மற்றும் டாப்சட்கோ ஆகியவற்றை செயல்படுத்தும் முகவர்களில் ஒன்றாகவும் இவ்வங்கி திகழ்கிறது. இவ்வங்கி தமிழ்நாடு முழுவதும் **44** கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றது. **2014–2015 –**ஆம் ஆண்டில், இவ்வங்கி ரூ.994.62 கோடி அளவிற்கு வைப்புகளை பெற்று, ரூ.**538.65** கோடி மதிப்பிற்கு கடன்களை வழங்கியுள்ளது. இதே காலத்தில் இவ்வங்கியானது ரூ.**5.88** கோடியை இலாபமாக அடைந்துள்ளது.

தாய்கோ வங்கியின் கடந்த **3** ஆண்டு கால செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | வைப்புத் தொகை (ரூபாய் கோடியில்) | கடன் மற்றும் முன்பணம் (ரூபாய் கோடியில்) | இலாபம் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| | | | |
| 2012-13 | 969.25 | 632.92 | 9.40 |
| 2013-14 | 1024.38 | 590.71 | 14.87 |
| 2014-15 | 994.62 | 538.65 | 5.88 |

## 22. கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள்

மாநிலத்தில் ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு குறிப்பாக மகளிர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி தருவதில் கயிறு தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. கயிறு தொழிலில் தமிழகமானது கேரளா மாநிலத்திற்கு அடுத்து இரண்டாம் நிலையில் இருந்தாலும், நாட்டிலேயே பழுப்பு நிற தென்னை நார் உற்பத்தியில் முதலிடத்தை வகிக்கிறது. இத்துறையின் கீழ் பல்வேறு கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு, தற்பொழுது மாநிலத்தில் மொத்தம் **66** கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. **2014–15** ஆம் ஆண்டில், இச்சங்கங்கள் அனைத்தும் ரூ.**2226.54** இலட்சம் மதிப்பிற்கு விற்பனை செய்து, ரூ.**307.79** இலட்சத்தை தங்களது கயிறு தொழிலாளர்களுக்கு கூலியாக வழங்கியுள்ளன.

கயிறு சங்கங்களின் கடந்த **3** ஆண்டு கால செயல்பாட்டு விவரங்கள் கீழ்க்கண்டவாறு ஆகும்.

| வருடம் | சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | விற்பனை மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 2012-13 | 71 | 10478 | 1607.01 |
| 2013-14 | 69 | 11644 | 2011.10 |
| 2014-15 | 66 | 11073 | 2226.54 |

# 3. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)

### 3.1 சிட்கோ நிறுவனத்தின் முக்கிய நோக்கம்

சிட்கோ நிறுவனம் தமிழக அரசால் **1970** ஆம் ஆண்டு தமிழகத்திலுள்ள குறு , சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை வழிநடத்தவும், ஆலோசனை வழங்கவும், உதவிடவும், நிதியுதவி பாதுகாப்பு மற்றும் அவற்றின் நலன்களை மேம்படுத்தவும், அவைகளுக்கு மூலதனம், கடன்வசதி, வழிமுறைகள், ஆதாரங்கள், தொழில்நுட்பம் மற்றும் நிர்வாகத்திறன் போன்றவைகளை பெறுவதற்கு உதவிடவும், அவற்றின் உற்பத்தி முறைகள், உற்பத்தி நுட்பங்கள், மேலாண்மை நுட்பங்கள் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்றவைகளை வளர்த்துவதற்கு உதவிடவும் நிறுவப்பட்டது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்களின் வளர்ச்சி மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதி ஆகியவற்றை அதிகப்படியாக வழங்குவதை மையப்படுத்தியே சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகள் அமைந்துள்ளது, தவிர சிட்கோ நிறுவனம் மேலும் விற்பனை வசதி மற்றும் மூலப் பொருட்கள் வழங்குதல் முதலிய சேவைகளையும் வழங்குகிறது.

இந்த நிறுவனத்தின் பங்கு மூலதனம் ரூபாய் **24.70** கோடியாகும். **2013–14** ஆம் நிதியாண்டில், ரூபாய் **2.59** கோடி இலாபம் பெற்று ரூ.**2.47** கோடி ஈவுத் தொகையாகவும் செலுத்தியுள்ளது.

## 3.2 தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு

தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான தொழிற்பேட்டைகளை மேம்படுத்தியும் அவற்றை நிர்வகித்தும் வருகிறது. **31.03.2015**வரை தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் **101** தொழிற்பேட்டைகளையும், **6993** மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளையும், மற்றும் **4510** தொழிற்கூடங்களையும் உருவாக்கியுள்ளது மேலும் **13** புதிய தொழிற்பேட்டைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொழிற்பேட்டைகளின் விவரங்கள் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### 3.2.1 சிட்கோ நிறுவனத்தின் பராமரிப்பில் உள்ள அரசு தொழிற்பேட்டைகள்

அரசு,மாநிலத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழிற்பேட்டைகளை ஏற்படுத்தியதில் முன்னோடியாகத் திகழ்கிறது. **1958**–லிருந்து **1974** வரை **4230** ஏக்கர் நிலப்பரப்பில் **35** தொழிற்பேட்டைகளை,தொழில் வணிக ஆணையரகத்தால் பரவலாக உருவாக்கப்பட்டுள்ளது. இதில் **1958**ம் ஆண்டில் முதல் தொழிற்பேட்டை, **404.08** ஏக்கர் நிலப்பரப்பில் கிண்டியில் நிறுவப்பட்டது. **1963**ஆம் ஆண்டு **1167** ஏக்கர் நிலப்பரப்பில் மிகப்பெரிய குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களான அம்பத்தூரில் தொழிற்பேட்டை நிறுவப்பட்டுள்ளது. அரசு ஆணை எண் **720** தொழில்கள்நாள் **17.05.1094**ன்படி தொழில் வணிக ஆணைரகம் சிட்கோ நிறுவனத்திற்கு தங்களின் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து தொழிற்பேட்டைகளையும் மாறுதல் செய்து கொடுத்துள்ளது. **01.06.1974** முதல் சிட்கோ நிறுவனம் மாறுதல் அரசின் முகவராக அத்தொழிற்பேட்டைகை நிர்வகித்து வருகிறது.

| சிட்கோ நிறுவனத்தால் நிர்வகித்து வரும் அரசு தொழிற்பேட்டைகளின் விவரங்கள் | | | | |
|---|---|---|---|---|
| வ.எண் | மாவட்டம் | தொழிற்பேட்டையின் பெயர் | ஆரம்பிக்கப்பட்ட வருடம் | மொத்த விஸ்தீரணம் (ஏக்கரில்) |
| 1 | சென்னை | 1) கிண்டி | 1958 | 404.08 |
| 2 | திருவள்ளூர் | 2) அம்பத்தூர் | 1963 | 1167.00 |
| | | 3) காக்களூர் | 1988 | 283.01 |
| 3 | காஞ்சிபுரம் | 4) காஞ்சிபுரம் | 1968 | 37.95 |
| 4 | வேலூர் | 5) காட்பாடி | 1968 | 19.48 |
| | | 6) அரக்கோணம் | 1968 | 51.74 |
| 5 | திருவண்ணாமலை | 7) திருவண்ணாமலை | 1968 | 15.56 |
| 6 | கிருஷ்ணகிரி | 8) கிருஷ்ணகிரி | 1965 | 41.86 |
| 7 | தர்மபுரி | 9) தர்மபுரி | 1965 | 20.28 |
| 8 | சேலம் | 10) சேலம் | 1967 | 19.55 |
| | | 11) மேட்டூர் | 1967 | 184.38 |
| 9 | ஈரோடு | 12) ஈரோடு | 1959 | 25.13 |
| 10 | கோயம்புத்தூர் | 13) குறிச்சி | 1972 | 88.43 |
| 11 | கடலூர் | 14) கடலூர் | 1971 | 15.60 |
| | | 15)வடலூர் | 1972 | 26.22 |
| 12 | தஞ்சாவூர் | 16) தஞ்சாவூர் | 1968 | 21.94 |
| | | 17)கும்பகோணம் | 1968 | 32.30 |
| 13 | நாகப்பட்டினம் | 18)நாகப்பட்டினம் | 1966 | 20.97 |
| 14 | திருச்சிராப்பள்ளி | 19)துவாக்குடி | 1974 | 478.38 |
| | | 20) திருவரம்பூர் | 1974 | 74.50 |
| | | 21) அரியமங்கலம் | 1974 | 17.64 |
| 15 | கரூர் | 22) கரூர் (வெள்ளாளப்பட்டி) | 1974 | 26.63 |
| 16 | புதுக்கோட்டை | 23) புதுக்கோட்டை | 1974 | 23.18 |
| 17 | தேனி | 24) தேனி | 1963 | 26.59 |
| 18 | திண்டுக்கல் | 25)திண்டுக்கல் | 1965 | 39.90 |
| | | 26)வத்தலகுண்டு | 1965 | 16.26 |
| 19 | மதுரை | 27)கே.புதூர் | 1960 | 56.05 |
| | | 28) கப்பலூர் | 1966 | 534.64 |
| 20 | சிவகங்கை | 29)சிவகங்கை | 1966 | 70.61 |
| | | 30)காரைக்குடி | 1966 | 180.19 |
| 21 | விருதுநகர் | 31)விருதுநகர் | 1958 | 45.65 |
| 22 | திருநெல்வேலி | 32) பேட்டை | 1959 | 50.55 |
| 23 | தூத்துக்குடி | 33) கோவில்பட்டி | 1962 | 85.54 |
| 24 | கன்னியாக்குமரி | 34) கோணம் | 1964 | 20.70 |
| | | 35) மார்த்தாண்டம் | 1964 | 7.50 |
| | | **மொத்தம்** | | **4229.99** |

### 3.2.2 தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தொழிற்பேட்டைகள்:

தொழிற்பேட்டைகளை மேம்படுத்தப்படுத்துவது, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் ஒரு முக்கியமான செயல்பாடாகும். தொழிற்பேட்டைக்களுக்கான அரசு நிலங்கள், அரசிடமிருந்து நில உரிமை மாற்றம் மூலமாகவும் மற்றும் தனியார் நிலங்கள் நில உரிமையாளரிடமிருந்தும் பெறப்படுகிறது.

### 3.2.2.1 2010–ம் ஆண்டு வரை சிட்கோ நிறுவனத்தால் நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

சிட்கோ நிறுவனம் 2010ம் ஆண்டு வரை 2332.67 ஏக்கர் நிலப்பரப்பில் 54 தொழிற்பேட்டைகளை நிறுவியுள்ளது. இத்தொழிற்பேட்டைகளில் 5207 குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைக்கப்பட்டு, 90,000 நபர்கள், வேலை வாய்ப்புப் பெற்றுள்ளார்கள்.

### 3.2.2.2 மகளிர் தொழிற் பூங்காக்கள்

2010–ம் ஆண்டு வரை, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 54 தொழிற்பேட்டைகளில், 5 தொழிற்பேட்டைகள் மகளிருக்கான தொழிற்பூங்காக்களாகும், இத்தொழிற்பூங்காக்களில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால், 2001 ஆம் ஆண்டு மகளிர் முன்னேற்றத்திற்காக அறிவிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக தொழில்மனைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

| வ. எண் | மகளிர்தொழிற்பூங்காவின் பெயர் | தொடங்கப்பட்ட ஆண்டு | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | திருமுல்லைவாயில் (திருவள்ளூர் மாவட்டம்) | 2001 | 246.07 |
| 2 | திருமுடிவாக்கம் (காஞ்சிபுரம் மாவட்டம்) | 2002 | 11.48 |

| | | | |
|---|---|---|---|
| 3 | வாழவந்தான்கோட்டை (திருச்சி மாவட்டம்) | 2003 | 51.70 |
| 4 | கருப்பூர் (சேலம் மாவட்டம்) | 2004 | 51.24 |
| 5 | கப்பலூர் (மதுரை மாவட்டம்) | 2008 | 18.87 |
| | மொத்தம் | | 379.36 |

### 3.2.2.3 2014–15 ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் / தொழில் மனைகள்

| வ. எண் | விவரங்கள் | 2013–14–ம் ஆண்டின் சாதனைகள் | | 2014–15–ஆம் ஆண்டிற்கான இலக்கு | | 2014–15–ம் ஆண்டிற்கான இலக்கு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு | எண்ணிக்கை | மதிப்பு |
| 1 | மேம்படுத்தப்பட்ட மனைகள் | 225 | 1079.13 | 215 | 2884.00 | 299 | 2648.69 |
| 2 | விற்பனை செய்யப்பட்ட மனைகள் | 335 | 7365.609 | 152 | 10636.05 | 85 | 2518.68 |
| 3 | விற்பனை செய்யப்பட்ட தொழிற்கூடங்கள் | 11 | 537.131 | 18 | 425.03 | 1 | 27.86 |

### 3.2.2.4 2011-2015 வரை நிறுவப்பட்ட தொழிற்பேட்டைகள்

2011 – 2015 வரை அறிவிக்கப்பட்ட 25 புதிய தொழிற்பேட்டைகளில் கீழ்வரும் 12 தொழிற்பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

| வ. எண் | தொழிற்பேட்டையின் பெயர் | துவங்கப்பட்ட வருடம் | பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|
| 1 | இராசாத்தவலசு (திருப்பூர் மாவட்டம்) | 2011 | 51.80 |
| 2 | மாத்தூர் (புதுக்கோட்டை மாவட்டம்) | 2013 | 19.92 |
| 3 | வாணியம்பாடி (வேலூர் மாவட்டம்) | 2013 | 7.08 |
| 4 | விருதுநகர் (நகர்புறம்) (விருதுநகர் மாவட்டம்) | 2013 | 37.54 |
| 5 | வெண்மணியாத்தூர் (விழுப்புரம் மாவட்டம்) | 2011 | 38.88 |

| | | | |
|---|---|---|---|
| 6 | பட்டணம் (விழுப்புரம் மாவட்டம்) | 2014 | 60.57 |
| 7 | காட்டுவன்னஞ்சூர் (விழுப்புரம் மாவட்டம்) | 2014 | 42.00 |
| 8 | மல்லூர் (அரியலூர் மாவட்டம்) | 2014 | 25.34 |
| 9 | பர்வதனஹள்ளி (தருமபுரி மாவட்டம்) | 2014 | 29.89 |
| 10 | மின்னூர் (வேலூர் மாவட்டம்) | 2014 | 10.00 |
| 11 | வேட்டம்பாடி (நாமக்கல் மாவட்டம்) | 2014 | 15.34 |
| 12 | பாளையபட்டி (தஞ்சாவூர் மாவட்டம்) | 2012 | 104.37 |
| **மொத்தம்** | | | **442.73** |

மீதமுள்ள 13 தொழிற்பேட்டைகளுக்கு தகுதியான நிலங்கள் தேர்வு செய்யப்பட்டு அவை பல்வேறு மேல் நடைவடிக்கை நிலைகளில் உள்ளன.

### 3.2.4 தனியார் தொழிற்பேட்டைகள்

14.11.2011 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **“நாமக்கல் நகரின் வெளியே தனியார் கனரக வாகன கட்டுமான தொழிற்பேட்டை ஒன்று கூட்டுறவு முயற்சியில் அமைக்கப்படும்“** என்ற அறிவிப்பை வெளியிட்டார். மேற்படி அறிவிப்பின்படி நாமக்கல் நகரத்திலிருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேலகவுண்டன்பட்டி கிராமத்தில் 52.23 ஏக்கர் நிலப்பரப்பில், ரூபாய் 1367.75 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், கனரக வாகன கட்டுமான தொழிற்பேட்டை அமைக்கப்பட உள்ளது.

தமிழக அரசின் ஆணை எண் 53, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்கள் துறை 10.10.2013ல் நாளிட்ட ஆணையில் ரூபாய் 1267.75 இலட்சங்கள், அரசின் மானியமாக ஒப்புதல் வழங்கப்பட்டு நாமக்கல்லின் புறநகர் பகுதியில் உள்ள அந்த கட்டுமான பணிகளுக்கு திட்டச் செலவாக ரூ.1367.75 இலட்சங்களில் இணைக்கூட்டு ஒப்பந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள ரூ.100 இலட்சங்கள் பயனாளிகள் மற்றும் சிறப்பு நோக்கு ஊர்தியின் பங்களிப்பாக இருக்கும்.

முதல் தவணையாக ரூ.633.87 இலட்சங்கள் பெறப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்த தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்பட்டதன் பயனாக 305 கனரக வாகன கட்டுமான நிறுவனங்கள் நகரத்திலிருந்து இடம் பெயர்வதால் நாமக்கல் நகரின் போக்குவரத்து நெரிசல் குறையும்.

**3.2.5 நகர் / மாநகரில் இயங்கிவரும் தொழிற்பேட்டைகளை வெளியே மாற்றி அமைத்தல்.**

மாண்புமிகு தமிழக முதல்வரால் 2013–14 ஆண்டு சட்டமன்றத்தில் சிறப்புச் சலுகைகள் கீழ் விதி 110–ன் கீழ் அறிவிக்கப்பட்டன. அந்த அறிவிப்பின் படி மாநில அரசு அரசாணை வழங்கி, வளர்ச்சி நிதியாக அரசு 75 விழுக்காடு மானியமாக அதிகபட்சமாக ரூ.15 கோடி வரை மின்சாரம் பெறுவதற்காகவும், தண்ணீர் இணைப்புகள் பெறுவதற்காகவும், உட்கட்டமைப்பு வசதிகளான கூட்டரங்குகள், பொது வசதி மையங்கள் முதலானவை ஏற்படுத்துவதற்காகவும் மற்றும் 50 விழுக்காடு மானியம் அதிகபட்சமாக ரூ.10 கோடி வரை தொழில் முனைவோர் சங்கங்களுக்கு ஒரு குழுமம் அமைத்து சிறப்பு நோக்க ஊர்தி மூலம், நகர் மற்றும் மாநகரத்தின் வெளியே அமைக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இது வரை 4 பிரேரணைகள், சிறப்பு நோக்க ஊர்திகளிடருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**3.2.6 கூட்டுக்குழும முயற்சி திட்டத்தில் தொழிற்பேட்டைகள்:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சட்டப்பேரவையின் 110 விதியின் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்பின் படி மாநில அரசு அரசாணை வழங்கியது, சிட்கோ நிறுவனத்தின் பங்கு 10 விழுக்காடு வரை தனியார் தொழிற்பேட்டை சங்கங்களுடன், பங்காக கொண்டு புதிய தொழிற்பேட்டைகளை கூட்டு முயற்சியில் உருவாக்கப்படும் என அறிவித்தார்.

**3.2.7 மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள**

**தொழிற்பேட்டைகளை மேம்படுத்துதல்:**

சிட்கோ நிறுவனம் நடைமுறையில் உள்ள தொழிற்ட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மத்திய அரசின் குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் மேம்படுத்துகிறது.

2011–15 ஆண்டு வரை கீழ்காணும் தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

(ரூபாய் இலட்சங்களில்)

| வ.எண் | தொழிற்பேட்டையின் பெயர் | திட்ட மதிப்பு | மைய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | பயனாளிகளின் பங்களிப்பு |
|---|---|---|---|---|---|
| 1 | கோவில்பட்டி துாக்குடி மாவட்டம் | 202.00 | 121.20 | 60.60 | 20.20 |
| 2 | ஆத்துார் கரூர் மாவட்டம் | 397.38 | 238.43 | 119.21 | 39.74 |
| 3 | காக்களூர் திருவள்ளுர் மாவட்டம் | 423.33 | 254.00 | 127.00 | 42.33 |
| 4 | மேட்டூர் சேலம் மாவட்டம் | 293.76 | 176.26 | 88.13 | 25.38 |
| 5 | கணபதிபாளையம் திருப்பூர் மாவட்டம் | 45.82 | 27.49 | 13.75 | 4.58 |
| 6 | ஆலத்தூர் காஞ்சிபுரம் மாவட்டம் | 444.96 | 266.98 | 133.49 | 44.50 |
| 7 | மலுமிச்சம்பட்டி கோயம்பபுத்துாா் மாவட்டம் | 200.00 | 113.25 | 56.62 | 30.13 |
| 8 | திருவரம்பூர் திருச்சி மாவட்டம் | 432.00 | 259.20 | 129.60 | 43.20 |
| | மொத்தம் | 2439.25 | 1456.81 | 728.40 | 250.06 |

மேற்கூறிய 8 திட்டங்களில் , 6 திட்டங்களான துாத்துக்குடி மாவட்டத்தில் கோவில்பட்டி, கரூர் மாவட்டத்தில் ஆத்துார், திருவள்ளூர் மாவட்டத்தில் காக்களூர், சேலம் மாவட்டத்தில் மேட்டூர் திருப்பூர் மாவட்டத்தில் கணபதிபாளையம் மற்றும்ஆலத்துார் காஞ்சிபுரம் மாவட்டம்

ஆகியவை முடிக்கப்பட்டு விட்டன.  கோயம்புத்தூர் மாவட்டத்தில் மலுமிச்சம்பட்டியில் பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.  திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் தொழிற்பேட்டையைப் பொருத்த வரை மத்திய அரசு இத்திட்டத்திற்கு கொள்கை அளவில் ஒப்புதல் அளித்துள்ளது. முழுஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

### 3.3 குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும மேம்பாட்டுத் திட்டத்தின் [ MSE-CDP] கீழ் பொது வசதி மையம் அமைத்தல்

குறு, சிறுதொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டமானது தொழில் நிறுவனங்களின் தேவையை பூர்த்தி செய்வதற்காக பீராந்திய பரப்பில் தொகுப்பாக அமைந்துள்ள குழுமங்களை உருவாக்கி குறு, சிறு தொழில் நிறுவனங்களின் ஆதாரங்களை பெருக்குவதற்கும் நிதி வசதிகளைப் பெருக்குவதற்கும் மற்றும் சந்தை வாய்ப்பை பெருக்குவதற்கும் உதவி செய்கிறது.

ஒரு குழுமம் என்பது குறிப்பிட்ட பீராந்திய அமைந்த ஒரே மாதிரியான மற்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய தொழில் நிறுவனங்களின் தொகுப்பாகும்.  அவை பொதுவான சந்தை, தொழில் நுட்பங்கள், தொழிலாளர் திறன் தேவைகளை பகிர்ந்து கொள்வதாகவும் ஒரே மாதிரியான பொருட்களை தயாரிப்பதாகவும் அமையும்.

குழுமங்களின் முக்கிய கூறுகள் பின் வருமாறு:

அ) தயாரிப்பு முறை, தரக்கட்டுப்பாடு, பரிசோதனை, சக்தியை பயன்படுத்துதல், மாசுக் கட்டுப்பாடு ஆகியவை ஒரே மாதிரியாக இருத்தல்.

ஆ) ஒரே மாதிரியான தொழில் நுட்பம் மற்றும் விற்பனை திட்டங்கள் மற்றும் அணுகுமுறைகள்

இ) குழும உறுப்பினர்களுடன் எளிமையான தொடர்பு முறைகள்

ஈ) பொதுவான சவால்கள் மற்றும் வாய்ப்புகள்

குறு, சிறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களக்கிடையே போட்டித்திறனை அதிகரிக்கவும் மற்றும் உற்பத்தியை பெருக்குவதற்கான முக்கிய உத்தியாக குழும வளர்ச்சியை மத்திய மற்றும் மாநில அரசுகள் மேற்கொண்டுள்ளது. தொழிலகங்களை குழுமங்களாக ஆக்குவதன் மூலம் பலதரப்பட்ட சேவைகளான வங்கி மற்றும் நிதி உதவி நிறுவனங்களின் சேவைகளை குறைந்த செலவில் பெறுவதன் மூலம் இச்சேவைகள் இக்குழுமங்களுக்கு சிக்கனமான வழியில் கிடைத்திடவும் அவை அதிக அளவில் கிடைத்திடவும் வழிவகை செய்யப்படுகிறது.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம், பொதுவான பிரச்சனைகளை அணுகி, குறு மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சி மற்றும் நிலைப்பாடு ஆகியவற்றை ஆதரித்தல் , சுயஉதவிக் குழு, கூட்டமைப்பு முதலியவற்றை ஏற்படுத்தி பொதுவான ஆதரவு அளித்தல் மற்றும் பொது வசதி மையம் ஏற்படுத்துதல் (பரிசோதனை மையம், பயிற்சி மையம், மூலப் பொருட்கள் கிடங்கு, கழிவு நீர் சுத்திகரிப்பு, உற்பத்தி முறையை பூர்த்தி செய்தல்) ஆகியவற்றை குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்கள் அடைய முடியும்.

குறு, சிறு தொழில் நிறுவனங்களின் குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பொது வசதி மையம் அமைப்பது தொடர்பான நிதி ஆதாரம் கீழ்வருமாறு:

| | |
|---|---|
| மத்திய அரசு மானியம் | 70 விழுக்காடு (அதிக பட்ச திட்டத் தொகை ரூ.15கோடி) |
| மாநில அரசு மானியம் | 10விழுக்காடு (அதிக பட்ச மானியம் ரூ.1கோடி) |
| சிறப்பு நோக்க ஊர்தி பங்களிப்பு/ வங்கிக் கடன் | 20 விழுக்காடு |

மொத்தமாக 29 திட்டங்களுக்கு ரூ. 157.36 கோடி மொத்த திட்ட மதிப்பீட்டில் மத்திய அரசின் மானியமாக ரூ. 106.37 கோடி அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. மாநில அரசு ரூ. 12.99 கோடி மானியம் அளித்துள்ளது. மேற்கூறிய 29 திட்டங்களில் 7 திட்டங்கள்

ஏற்கனவே முடிவடைந்துவிட்டன. மீதமுள்ள திட்டங்கள் பல்வேறு நிலைகளில் உள்ளன (இணைப்பு – ஆ) இக்குழுமங்களின் மூலமாக சுமார் 25000 நபர்கள் வேலை வாய்ப்பு பெறுவர்.

குந்தா தொழில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையின் பொன் விழா கொண்டாட்டத்தின் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ரூ 15.00 கோடி திட்ட மதிப்பீட்டில் நீலகிரி மாவட்ட தேயிலை தொழிலை ஊக்குவிக்க கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளையத்தில், ஒரு பொது வசதி மையத்துடன் கூடிய தேயிலைக் குழுமம் (Tea cluster) உருவாக்கப்படும் என்று அறிவித்தார்கள். தேயிலைத்தூள் கலத்தல், தேயிலைத்தூளை பெட்டிகளில் வைத்து கட்டி (Packing), சேமிப்புக் கிடங்கு, ஆய்வகம் மற்றும் விற்பனை மையம் ஆகியவற்றை கொண்டதாக இந்த பொது வசதி மையம் இருக்கும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 04.01.2014 அன்று இதற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். டிட்கோ நிறுவன மூலமாக அசைடு (ASIDE) திட்டத்தின் கீழ் சேமிப்பு கிடங்கிற்கான நிதி உதவி பெறப்பட்டுள்ளது. சேமிப்பு கிடங்கு பணிகள் முடிக்கப்பட்டவுடன் பொது வசதி மையம் அமைப்பதற்கு குறு, சிறு தொழில் நிறுவனங்கள் – குழும வளர்ச்சி திட்டத்தின் கீழ் நிதி உதவி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

மாநிலத்தில் குறு,சிறு தொழில் நிறுவனங்கள் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் (பொது வசதி மையம்) செயல்பாட்டின் விபரம் கீழ் கண்டவாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| அ. | மத்திய அரசிடமிருந்து இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (இணைப்பு – ஆ) | 29 |
| ஆ. | மத்திய அரசினால் கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப் பட்ட திட்டங்கள் | 03 |
| இ. | மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட பல்வேறு நிலையில் உள்ள திட்டங்கள் | 20 |

### 3.3.1 குறுந்தொழில் குழுமம்

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் **13.02.2014** அன்று நிதி நிலை அறிக்கையின்போது தமிழக அரசு குறுந் தொழில் குழுமங்களை ஊக்குவிக்கும் பொருட்டு கொள்கை அளவில் முடிவு செய்துள்ளது என்றும், அதன்படி தமிழக அரசின் புதிய திட்டமாகிய பொது உற்பத்தி மையம் ஒன்றை தொடங்குவதற்கு ஆவண செய்வதுடன் மூலப்பொருள் வங்கி மற்றும் விற்பனை வசதி ஆகியவற்றையும் கணக்கில் கொண்டு திட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்தார். முதற்கட்டமாக **2014–15**ம் ஆண்டில் **10** குழுமங்களை மேம்படுத்த ரூ.**25** கோடியை அரசு வழங்கும். இந்த திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 3.3.2 பகுதி –2 திட்டம்

இத்திட்டத்தின் கீழ் நடைமுறையில் உள்ள தொழிற்பேட்டைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம், தமிழ்நாடு அரசிடமிருந்து **2011–15** காலத்தில் ரூ. **107.50** இலட்சங்கள் மானியமாக பெற்று நடவடிக்கையில் உள்ள ஒரு பணியை தவிர இதர பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் கீழ்வருமாறு :

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | ஆண்டு | பயனடைந்த தொழிற் பேட்டை களின் எண்ணிக்கை | ஒப்பளிப்பு வழங்கப் பட்ட திட்ட மதிப்பீடு | பெறப் பட்ட தமிழ்நாடு அரசின் மானியம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1 | 2011 – 2012 | 5 | 150.00 | 30.00 | பணிகள் முடிவடைந்து விட்டன |
| 2 | 2012 – 2013 | 3 (தூத்துக்குடி கீழநகாச்சி, குடிமங்கலம்) | 110.00 | 27.50 | பணிகள் முடிவடைந்து விட்டன |
| 3 | 2013–2014 | 1 (பொது வசதி மையம் காக்களூர் தொழிற்பேட்டை) | 25.00 | 25.00 | பணிகள் முடிவடைந்து விட்டன |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | 2014–2015 | 2 (முதலுதவி மற்றும் மருந்தகம் அமைத்தல், கப்பலூர் (அரசு) (மதுரை மாவட்டம்) மற்றும் குறிச்சி (அரசு) (கோயம்புத்தூர் மாவட்டம்) | 25.00 | 25.00 | பணிகள் நடைபெற்று வருகின்றன |
| மொத்தம் | | | **310.00** | **107.50** | |

## 3.4 மூலப்பொருட்கள் விநியோகம்

மூலப்பொருட்களாகிய இரும்பு மற்றும் எஃகு, மெழுகு, பொட்டாசியம் குளோரேட் மற்றும் தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்தின் காகிதம் ஆகியவற்றை அம்பத்தூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சாத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய இடங்களில் உள்ள மூலப்பொருள் கிடங்குகளின் வழியாகவும் ஈரோடு, சேலம், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய கிளை அலுவலகங்களின் வழியாகவும் சிட்கோ நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது.

2014–15 ஆம் நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு, எட்டிய சாதனை ஆகியவை பின்வருமாறு:

| வ. எண் | மூலப் பொருள் | இலக்கு 2014–15 | | சாதனை 2014–15 | |
|---|---|---|---|---|---|
| | | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) | அளவு (மெ. டன்னில்) | மதிப்பு ரூ. (இலட்சத்தில்) |
| 1 | இரும்பு மற்றும் எஃகு | 4400.000 | 1981.00 | 68.92 | 30.74 |
| 2 | பாரபின் மெழுகு | 5170.000 | 5017.00 | 3116.23 | 3013.09 |
| 3 | காகிதம் (நேரடி விற்பனை) | 240.000 | 150.00 | 179.843 | 127.86 |
| 4 | காகிதம் (முகவாண்மை விற்பனை) | 1210.000 | 726.00 | 460.046 | 307.35 |
| 5 | பொட்டாசியம் குளோரேட் | 5.500 | 5.28 | 4.000 | 4.06 |
| மொத்தம் | | **11025.500** | **7879.28** | **3829.034** | **3483.09** |

### 3.5 விற்பனை உதவித் திட்டம்

சிட்கோ நிறுவனம் 2014–15 ஆம் ஆண்டில் ரூ. 330.24 இலட்சங்கள் வரை ரூபாய் மதிப்பிலான வழங்கல் ஆணைகளைப் பெற்று நிறைவேற்றி இருக்கிறது.

விற்பனை திட்டத்தின் கீழ், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு சிட்கோ உதவி செய்கிறது. இத்திட்டத்தின் கீழ் சிட்கோவிடம் பதிவு செய்த குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் சார்பாக சிட்கோ மாநில அரசுத் துறைகள் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பொதுத்துறை /நிறுவனங்களை அணுகி வழங்கல் ஆணைகளை பெற்று உதவுகிறது. சிட்கோ நிறுவனத்தால் பெறப்பட்ட வழங்கல் ஆணைகள், குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களின் இடையே பகிர்ந்தளிக்கப்படுகின்றன. தரமான பொருட்களை சரியான நேரத்தில் வழங்கப்படுவதை சிட்கோ நிறுவனம் உறுதி செய்கிறது. வழங்கப்பட்ட பொருட்களுக்கு அரசுத் துறைகள் /உள்ளாட்சி அமைப்புகள் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் தொகையில் 3% ஆலோசனைக் கட்டணமாக பிடித்தம் செய்த பின்னர் சிறு தொழில் நிறுவனங்களுக்கு பொருட்களுக்கு உண்டான தொகை வழங்கப்படுகிறது.

### 3.6 மின் ஆளுமை

சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடுகளை மறு சீரமைக்கும் குறிக்கோளுடன் அலுவலக நடைமுறைகளை எளிமையாக்கி இந்நிறுவனத்தின் செயல்பாடுகளை விரைவுபடுத்தும் பொருட்டும் இந்நிறுவனம் அதனுடைய அனைத்துப் பணிகளையும் கணினிமயமாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் வேலைதிறனை அதிகரிக்கவும் திறம்பட செயலாற்றவும் இயலும். முதற்கட்டமாக தொழில் மனைகள் ஒதுக்கீட்டிற்கான விண்ணப்பப் படிவங்களை சிட்கோ நிறுவனத்தின் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் (download) செய்துகொள்ளும் வசதியை இந்நிறுவனம் அறிமுகப்படுத்தி உள்ளது.

மாநிலத்தில் சிட்கோவால் பராமரிக்கப்படும் அனைத்து தொழிற்பேட்டைகள் குறித்த முக்கிய விவரங்களான வரைபடம் தொழில் கூடம்/ மனை, ஒதுக்கீட்டு விவரங்கள் தொழிலகங்களின் தொழில் நடவடிக்கைகள், உருவாக்கப்பட்ட வேலை வாய்ப்பு, உற்பத்திப் பொருட்கள் / சேவைகள், சந்தை வசதி மற்றும் மூலப்பொருட்கள் அடங்கிய GIS தகவல் தொகுப்பு ஒன்றை உருவாக்கும் பணி எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஆர்வமுள்ள நபர்கள் இலவசமாக அணுகிப் பெற சிட்கோவின் அதிகார பூர்வ இணைதளத்தில் இவ்விவரங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.

தொழிற்பேட்டையின் வரைபடத்தின் தொழில் மனைகள் / தொழிற்கூடங்கள் பற்றிய விவரங்கள் பதிவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகிறது.

## 3.7 நிதி நிலை அறிக்கை

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எண் | விவரங்கள் | 2010–11 | 2011–12 | 2012–13 | 2013–14 | 2014–15 |
|---|---|---|---|---|---|---|
| 1 | மனைகள் மற்றும் தொழிற்கூட விற்பனைகள் மூலம் வருவாய் | **7589.11** | **7525.20** | **6020.90** | **6111.62** | **5666.54** |
| 2 | இதர வருவாய் | **2166.15** | **2004.72** | **2135.39** | **1813.38** | **1696.06** |
| 3 | மொத்தம் | **9755.26** | **9529.92** | **8156.29** | **7925.00** | **7362.60** |
| 4 | இலாபம் | **1862.73** | **1014.57** | **527.78** | **259.16** | **217.85** |
| 6 | அரசுக்கு செலுத்தப்பட்ட ஈவுத் தொகை | **87.00** | **87.00** | **87.00** | **247.00** | **247.00** |

## தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி) 1965ஆம் வருடம் 64 தொழிற்கூடங்களுடன் தொடங்கியது. நலிவுற்ற சில தொழிற்கூடங்களை மூடியபிறகு, தற்போது தமிழ்நாடு முழுவதும் 29 உற்பத்திக் கூடங்களும் சென்னை, நாமக்கல் மற்றும் திருச்சியில் தலா ஒரு காட்சியகமும் இயங்கி வருகின்றன.

**கடந்த 3 ஆண்டுகளின் செயல்பாடுகள் (துணிக்கைக்குப்பின்)**

(ரூபாய் கோடியில்)

| | 2011–12 | 2012–13 | 2013–14 |
|---|---|---|---|
| **உற்பத்தி** | 92.80 | 70.96 | 97.02 |
| விற்பனை | 94.01 | 73.22 | 98.70 |
| இலாபம் | 6.42 | 3.05 | 10.00 |

**2014–15ஆம் ஆண்டிற்கான செயல்பாடு (மார்ச், 2015 வரை) மற்றும் 2015–16 ஆம் ஆண்டிற்கானசெயல்பாடு (ஜுலை, 2015 வரை)**

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2014–15 | | 2015–16 | |
|---|---|---|---|---|
| | இலக்கு | செயல்பாடு (மார்ச், 2015 வரை) | இலக்கு | செயல்பாடு (ஜூலை, 2015, வரை) |
| உற்பத்தி | 66.00 | 57.59 | 77.00 | 19.59 |
| விற்பனை | 66.00 | 57.53 | 77.00 | 23.97 |
| வரிக்கு முன் இலாபம் | 17.07 | 15.05 | 19.23 | 2.26 |
| வருமான வரி ஒதுக்கீடு | 5.80 | 4.76 | 6.54 | 0.77 |
| நிகர இலாபம் (தோராயமாக) | 11.27 | 10.29 | 12.69 | 1.49 |

## உலகத் தர சான்றிதழ் (ISO – 9001–2008)

அனைவரும் பெருமைப்படத்தக்க வகையில் டான்சியின் 2 ஆழ் குழாய் கைப்பம்பு தொழிற்சாலைகளாகிய டான்சி கைப்பம்பு தொழிற்சாலை, (அம்பத்தூர்) மற்றும் டான்சி கருவி மற்றும் பொறியியல் தொழிற்சாலை, (திருச்சி), 3 அறைகலன் தொழிற்சாலைகளாகிய டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை, (பழனி), டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை, (இராஜபாளையம்), மற்றும் டான்சி எஃகு அறைகலன் தொழிற்சாலை (வேலூர்), மற்றும் டான்சியின் துணை நிறுவனமான தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் லிமிடெட் (டாபப்) தயாரிப்பு நிறுவனமும் ஐ. எஸ். ஓ. 9001–2008 தரச் சான்றிதழை சென்னையிலுள்ள பி.எஸ்.ஐ மேனேஜ்மென்ட் சிஸ்டம் இந்தியா (பி) லிமிடெட், மூலமாகப் பெற்று தரமான பொருட்களைத் தயாரித்து வருகின்றன.

### தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்)

டான்சியின் கீழ் தமிழ்நாடு வர்ணம் மற்றும் உபபொருட்கள் நிறுவனம் (டாபப்) என்ற துணை நிறுவனமும் செயல்பட்டு வருகிறது. இது, சிவப்பு ஆக்ஸைடு வர்ணம், சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறி இடுகின்ற இரப்பர் கலந்த வர்ணம், மற்றும் இதர வர்ணங்களை உற்பத்தி செய்து வழங்கி வருகிறது. அதன் செயல்பாடு பின்வருமாறு:

**கடந்த 3 ஆண்டுகளின் செயல்பாடுகள் (துணிக்கைக்குப்பின்)**

(ரூபாய் கோடியில்)

| | **2011–12** | **2012–13** | **2013–14** |
|---|---|---|---|
| **உற்பத்தி** | 3.25 | 2.31 | 3.04 |
| விற்பனை | 3.25 | 2.31 | 3.10 |
| இலாபம் | 0.21 | 0.20 | 0.59 |

**2014–15ஆம் ஆண்டிற்கான செயல்பாடு (மார்ச், 2015 வரை) மற்றும் 2015–16 ஆம் ஆண்டிற்கானசெயல்பாடு (ஜூலை, 2015 வரை)**

(ரூபாய் கோடியில்)

| விபரம் | 2014–15 | | 2015–16 | |
|---|---|---|---|---|
| | இலக்கு | செயல்பாடு (மார்ச்,2015 வரை) | இலக்கு | செயல்பாடு (ஜூலை 2015 வரை) |
| **உற்பத்தி** | 2.30 | 1.66 | 3.00 | 0.83 |
| விற்பனை | 2.30 | 1.67 | 3.00 | 0.83 |
| வரிக்கு முன் இலாபம் | 0.30 | 0.25 | 0.35 | 0.09 |
| வருமான வரி ஒதுக்கீடு | 0.12 | 0.09 | 0.14 | 0.03 |
| நிகர இலாபம் (உத்தேசமாக) | 0.18 | 0.16 | 0.21 | 0.06 |

**இலாபம்**

டான்சி 2008–09 முதல் 2014–15ஆம் ஆண்டு வரை தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. 2014–15 ஆம் ஆண்டு டான்சி ரூ.10.29 கோடி (தோராயமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது

## இணைப்பு–அ

### சிட்கோ நிறுவனத்தால் தற்போது பராமரிக்கப்படும் தொழிற்பேட்டைகள்

| வ. எ ண் | மாவட்டம் | வ. எண் | அமைவிடம் | அரசு / சிட்கோ | துவங்கப் பட்ட ஆண்டு | மொத்த பரப்பளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | சென்னை | 1 | கிண்டி | அரசு | 1958 | 404.08 |
| | | 2 | அரும்பாக்கம் | சிட்கோ | 1979 | 3.92 |
| | | 3 | வில்லிவாக்கம் | சிட்கோ | 1979 | 2.04 |
| | | 4 | கொடுங்கையூர் | சிட்கோ | 1979 | 7.88 |
| 2 | திருவள்ளூர் | 5 | அம்பத்தூர் | அரசு | 1963 | 1167.00 |
| | | 6 | காக்களூர் | அரசு | 1988 | 283.01 |
| | | 7 | திருமழிசை | சிட்கோ | 1988 | 160.85 |
| | | 8 | கும்மிடிபூண்டி | சிட்கோ | 1988 | 25.24 |
| | | 9 | ஆர்.கே.பேட்டை | சிட்கோ | 1996 | 8.15 |
| | | 10 | விச்சூர் | சிட்கோ | 1994 | 59.16 |
| | | 11 | திருமுல்லைவாயல் (ம.தொ.பூ.) | சிட்கோ | 2001 | 246.07 |
| 3 | காஞ்சிபுரம் | 12 | காஞ்சிபுரம் | அரசு | 1968 | 37.95 |
| | | 13 | மறைமலைநகர் | சிட்கோ | 1981 | 39.50 |
| | | 14 | ஆலத்தூர் | சிட்கோ | 1984 | 150.00 |
| | | 15 | திருமுடிவாக்கம் (முதன்மை) | சிட்கோ | 1993 | 201.11 |
| | | 16 | திருமுடிவாக்கம் (குறு) | சிட்கோ | 2013 | 5.262 |
| | | 17 | திருமுடிவாக்கம் (ம.தொ. பூ.) | சிட்கோ | 2002 | 11.48 |
| 4 | வேலூர் | 18 | காட்பாடி | அரசு | 1968 | 19.48 |
| | | 19 | அரக்கோணம் | அரசு | 1968 | 51.74 |
| | | 20 | ராணிப்பேட்டை | சிட்கோ | 1972 | 113.44 |
| | | 21 | முகுந்தராயபுரம் | சிட்கோ | 1980 | 86.19 |
| | | 22 | வன்னிவேடு | சிட்கோ | 1987 | 16.44 |
| | | 23 | விண்ணமங்கலம் | சிட்கோ | 2009 | 10.49 |
| | | 24 | வாணியம்பாடி | சிட்கோ | 2013 | 7.08 |
| 5 | திருவண்ணாமலை | 25 | திருவண்ணாமலை | அரசு | 1968 | 15.56 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | கிருஷ்ணகிரி | 26 | கிருஷ்ணகிரி | அரசு | 1965 | 41.86 |
| | | 27 | ஊத்தங்கரை | சிட்கோ | 1995 | 41.28 |
| | | 28 | ஓசூர் (சிப்காட்) | சிட்கோ | 1976 | 95.15 |
| | | 29 | ஓசூர் (புதியது) | சிட்கோ | 1999 | 18.80 |
| | | 30 | பர்கூர் | சிட்கோ | 1995 | 31.64 |
| | | 31 | போலுப்பள்ளி | சிட்கோ | 2009 | 60.96 |
| 7 | தருமபுரி | 32 | தருமபுரி | அரசு | 1965 | 20.28 |
| | | 33 | கடகத்தூர் | சிட்கோ | 2009 | 7.02 |
| | | 34 | பர்வதனஹள்ளி | சிட்கோ | 2014 | 29.89 |
| 8 | சேலம் | 35 | சேலம் | அரசு | 1967 | 19.55 |
| | | 36 | மேட்டூர் | அரசு | 1967 | 184.38 |
| | | 37 | கருப்பூர் (ம.தொ. பூ.) | சிட்கோ | 2004 | 51.24 |
| | | 38 | வீரபாண்டி | சிட்கோ | 1993 | 9.79 |
| 9 | நாமக்கல் | 39 | நாமக்கல் | சிட்கோ | 1977 | 10.09 |
| | | 40 | திருச்செங்கோடு | சிட்கோ | 1980 | 9.18 |
| | | 41 | வேட்டம்படி | சிட்கோ | 2014 | 15.34 |
| 10 | ஈரோடு | 42 | ஈரோடு | அரசு | 1959 | 25.13 |
| | | 43 | நஞ்சை ஊத்துக்குளி | சிட்கோ | 1995 | 13.05 |
| 11 | கோயம்புத்தூர் | 44 | குறிச்சி | அரசு | 1972 | 88.43 |
| | | 45 | மலுமிச்சம்பட்டி | சிட்கோ | 1994 | 36.14 |
| 12 | திருப்பூர் | 46 | கணபதிபாளையம் | சிட்கோ | 1993 | 17.10 |
| | | 47 | திருப்பூர் | சிட்கோ | 1978 | 10.14 |
| | | 48 | குடிமங்கலம் | சிட்கோ | 1992 | 6.74 |
| | | 49 | ராசாத்த வலசு | சிட்கோ | 2011 | 51.80 |
| 13 | நீலகிரி | 50 | ஊட்டி | சிட்கோ | 1981 | 10.65 |
| 14 | கடலூர் | 51 | கடலூர் | அரசு | 1971 | 15.60 |
| | | 52 | வடலூர் | அரசு | 1972 | 26.22 |
| 15 | விழுப்புரம் | 53 | பட்டணம் | சிட்கோ | 2014 | 60.55 |
| | | 54 | ஆசனூார் | சிட்கோ | 2009 | 107.80 |
| | | 55 | காட்டுவன்னஞ்சூர் | சிட்கோ | 2014 | 42.00 |
| | | 56 | வெண்மணி யாத்தூார் | சிட்கோ | 2011 | 38.88 |
| 16 | பெரம்பலூர் | 57 | எலம்பலூர் | சிட்கோ | 2009 | 44.48 |
| 17 | தஞ்சாவூர் | 58 | தஞ்சாவூர் | அரசு | 1968 | 21.94 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | 59 | கும்பகோணம் | அரசு | 1968 | 32.30 |
| | | 60 | பிள்ளையார்பட்டி | சிட்கோ | 1974 | 10.96 |
| | | 61 | நாஞ்சிக்கோட்டை | சிட்கோ | 1996 | 26.30 |
| | | 62 | பாளையபட்டி | சிட்கோ | 2012 | 104.37 |
| 18 | நாகப்பட்டினம் | 63 | நாகப்பட்டினம் | அரசு | 1966 | 20.97 |
| | | 64 | மயிலாடுதுறை | சிட்கோ | 2009 | 12.56 |
| 19 | திருச்சி | 65 | துவாக்குடி | அரசு | 1974 | 478.38 |
| | | 66 | திருவெறும்பூர் | அரசு | 1974 | 74.50 |
| | | 67 | அரியமங்கலம் | அரசு | 1974 | 17.64 |
| | | 68 | கும்பக்குடி | சிட்கோ | 2009 | 24.46 |
| | | 69 | வாழவந்தான்கோட்டை (ம.தொ. பூ.) | சிட்கோ | 2003 | 51.70 |
| | | 70 | வாழவந்தான் கோட்டை | சிட்கோ | 2008 | 179.02 |
| 20 | கரூர் | 71 | கரூர் (வெள்ளாளப்பட்டி) | அரசு | 1974 | 26.63 |
| | | 72 | கரூர் (ஆத்தூர்) | சிட்கோ | 1993 | 36.29 |
| 21 | புதுக்கோட்டை | 73 | புதுக்கோட்டை | அரசு | 1974 | 23.18 |
| | | 74 | புதுக்கோட்டை (சிப்காட்) | சிட்கோ | 1988 | 51.45 |
| | | 75 | மாத்தூர் | சிட்கோ | 1975 | 26.00 |
| | | 76 | மாத்தூர் (புதியது) | சிட்கோ | 2013 | 19.92 |
| 22 | தேனி | 77 | தேனி | அரசு | 1963 | 26.59 |
| | | 78 | ஆண்டிப்பட்டி | சிட்கோ | 1994 | 22.34 |
| 23 | திண்டுக்கல் | 79 | திண்டுக்கல் | அரசு | 1965 | 39.90 |
| | | 80 | வத்தலகுண்டு | அரசு | 1965 | 16.26 |
| 24 | மதுரை | 81 | மதுரை (கே.புதூர்) | அரசு | 1960 | 56.05 |
| | | 82 | கப்பலூர் | அரசு | 1966 | 534.64 |
| | | 83 | கப்பலூர் (ம.தொ. பூ) | சிட்கோ | 2008 | 18.87 |
| 25 | இராமநாதபுரம் | 84 | பரமக்குடி | சிட்கோ | 1976 | 10.00 |
| | | 85 | உரப்புளி | சிட்கோ | 1993 | 12.14 |
| | | 86 | கீழநகாச்சி | சிட்கோ | 1993 | 10.00 |
| 26 | சிவகங்கை | 87 | சிவகங்கை | அரசு | 1996 | 70.61 |
| | | 88 | காரைக்குடி | அரசு | 1966 | 180.19 |
| | | 89 | கிருங்காக்கோட்டை | சிட்கோ | 1993 | 21.85 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 27 | விருதுநகர் | 90 | விருதுநகர் | அரசு | 1958 | 45.65 |
| | | 91 | ராசபாளையம் | சிட்கோ | 1995 | 41.13 |
| | | 92 | விருதுநகர் (நகர் புறம்) | சிட்கோ | 2013 | 37.54 |
| 28 | திருநெல்வேலி | 93 | பேட்டை | அரசு | 1959 | 50.55 |
| | | 94 | கடையநல்லூர் | சிட்கோ | 1992 | 10.00 |
| | | 95 | வள்ளியூர் | சிட்கோ | 2005 | 39.91 |
| 29 | தூத்துக்குடி | 96 | தூத்துக்குடி பகுதி 1 | சிட்கோ | 1988 | 9.72 |
| | | 97 | தூத்துக்குடி பகுதி 2 | சிட்கோ | 2003 | 14.46 |
| | | 98 | கோவில்பட்டி | அரசு | 1962 | 85.54 |
| 30 | கன்னியாகுமரி | 99 | கோணம் | அரசு | 1964 | 20.70 |
| | | 100 | மார்த்தாண்டம் | அரசு | 1964 | 7.50 |
| 31 | அரியலூர் | 101 | மல்லூர் | சிட்கோ | 2014 | 25.34 |
| | | | **மொத்தம்** | | | **7020.36** |

## அட்டவணை –ஆ

## குறு,சிறு நிறுவனங்கள் – குழும வளர்ச்சித் திட்டம் ( பொது வசதி மையம்) மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்ட திட்டங்கள் (29)

(ரூபாய் இலட்சங்களில்)

| வ. எ ண் | குழுமத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு (CFC) | மத்திய அரசின் மானியம் | மாநில அரசின் மானியம் | சிறப்பு நோக்க ஊர்தி பங்கு | வங்கிக் கடன் | தற்போதைய நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஜவ்வரிசி குழுமம், சேலம். | 92.06 | 73.31 | 0.00 | 18.75 | 0.00 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| | தீப்பெட்டிக் குழுமம், குடியாத்தம் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 3 | தீப்பெட்டிக் குழுமம், விருதுநகர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 4 | தீப்பெட்டிக் குழுமம், ஸ்ரீவில்லிப் புத்தூர். | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 5 | தீப்பெட்டிக் குழுமம், சாத்தூர் | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 6 | தீப்பெட்டிக் குழுமம், கழுகுமலை | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 7 | தீப்பெட்டிக் குழுமம், கோவில் பட்டி | 156.00 | 85.54 | 10.73 | 25.00 | 34.73 | திட்ட பணிகள் முடிவடைந்துள்ளன |
| 8 | மாவு அரவை இயந்திரம் தயாரிக்கும் குழுமம், கோயம் புத்தூர். | 288.20 | 99.00 | 16.52 | 172.68 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. |
| 9 | செங்கல் சூளை குழுமம், திருநெல்வேலி. | 227.27 | 122.73 | 22.72 | 29.55 | 52.27 | திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. |
| 10 | பீங்கான் குழுமம், விருதாச் சலம். | 73.10 | 43.86 | மாநில அரசு 2 தொழிற் கூடங்களும் ரூ. 9.57 இலட்சம் வழங்கி உள்ளது. | 18.45 | 10.79 | திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 11 | கயிறு குழுமம், சிவகங்கை. | 658.90 | 500.01 | 65.89 | 93.00 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 12 | பொறியியல் குழுமம், இராணிப் பேட்டை | 927.08 | 616.39 | 97.21 | 109.35 | 104.13 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 13 | அச்சுக் குழுமம், சிவகாசி. | 1314.17 | 767.81 | 90.66 | 180.28 | 276.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 14 | அரிசி ஆலைக் குழுமம், கீழப்பாவூர். | 690.58 | 466.03 | 69.05 | 145.50 | 10.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 15 | தானியங்கி உதிரி பாகங்கள் குழுமம், ஓசூர். | 690.94 | 439.89 | 70.75 | 105.30 | 75.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 16 | அச்சு குழுமம், கிருஷ்ணகிரி | 1172.52 | 964.14 | 100.00 | 108.38 | 0.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது. |
| 17 | அரிசி ஆலைக் குழுமம், ஆலங்குளம் | 787.00 | 550.25 | 78.91 | 83.75 | 74.09 | மத்திய அரசின் முழு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. மானியம் ஒரு பகுதி பெறப்பட்டுள்ளது. |
| 18 | அரிசி ஆலைக் குழுமம், தஞ்சாவூர் | 212.06 | 100.23 | 40.43 | 21.40 | 50.00 | திட்டம் நடைமுறை படுத்தப்பட்டு வருகிறது. |
| 19 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பேப்ரிகேஷன்ஸ், சேலம் | 1632.74 | 1277.71 | 100.00 | 253.03 | 0.00 | திட்ட ஆயத்த பணிகள் நடை பெற்று வருகிறது. |
| 20 | சென்னை பிளாஸ்டிக் குழுமம், காஞ்சிபுரம் | 1485.12 | 1026.96 | 100.00 | 258.16 | 100.00 | திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது |
| 21 | ரீப்ராக்டரி குழுமம் விருதாச் சலம் | 896.46 | 571.44 | 89.85 | 135.17 | 100.00 | திட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. |
| 22 | பொறியியல் குழுமம், பரமக்குடி | 498.89 | 373.80 | 23.34 | 53.75 | 48.00 | திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது |
| 23 | கேட் & கிரில் குழுமம், திருமுல்லைவாயில் | 284.87 | 197.93 | 29.69 | 57.25 | 0.00 | திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது |
| 24 | ஆயத்த ஆடை குழுமம் (பெண்கள்), தளவாய்புரம் | 104.24 | 74.28 | 9.36 | 20.60 | 0.00 | திட்ட ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 25 | தங்க நகை குழுமம், மதுரை | 356.46 | 255.80 | 29.14 | 39.92 | 31.60 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முன்ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 26 | தானியங்கி மற்றும் விசைத்தறி குழுமம், சேலம். | 1333.96 | 886.45 | 98.78 | 162.18 | 186.10 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. முன் ஆயத்த பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 27 | தீப்பெட்டிக் குழுமம், ஓ.மேட்டுப் பட்டி | **346.89** | **204.64** | **36.00** | **42.50** | **63.75** | திட்ட பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளன. |
| 28 | ஸ்டைன்லெஸ் ஸ்டீல் பாத்திரங்கள் குழுமம், கும்பகோணம் | **126.30** | **98.83** | **7.90** | **19.57** | **0.00** | திட்ட பணிகள் நடைபெறும் நிலையில் உள்ளது. |
| 29 | கயிறு குழுமம், ஈரோடு | 600.00 | 411.93 | 48.65 | 79.42 | 60.00 | மத்திய அரசின் இறுதி ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. திட்ட பணிகள் முன் ஆயத்த செயல்பாட்டில் உள்ளது. |

**ப. மோகன்**
**ஊரகத் தொழில் மற்றும்**
**தொழிலாளர் நலத் துறை அமைச்சர்**